


# இயேசுவே ஆண்டவர் துதி கீதங்கள்

K. Anushiya

# இயேசுவே ஆண்டவர் துதி கீதங்கள்

அன்புக்குரியவர்களே!

"அல்லேலூயா! என் நெஞ்சே! நீ ஆண்டவரைப் போற்றிடு; நான் உயிரோடு உள்ளளவும் ஆண்டவரைப் போற்றிடுவேன்; என் வாழ்நாளெல்லாம் என் கடவுளைப் புகழ்ந்து பாடிடுவேன்." (திருப்பாடல். 146 : 1-2)

ஆண்டவரைப் புகழ்ந்து பாடுவது நல்லது. அது இனிமையானது. கடவுளுக்கு ஏற்புடையது.

இந்த புத்தகத்தில் உள்ள பாடல்கள் அனைத்துமே பைபிள் வசனங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டன. ஜெபத்திலும் ஆழ்ந்த தியானத்திலும் தங்கி வார்த்தைகள் அமைக்கப்பட்டன. அப்படியே தூய ஆவியானவரின் உந்துதலின்படி எழுதப்பட்டு இசை அமைக்கப்பட்டது.

ஜெப உணர்வோடு இந்த பாடல்களை தியானித்துப் பாடுங்கள். மிகவும் ஆறுதல் அடைவீர்கள். உள்ளத்தில் நிறைவு பெறுவீர்கள். ஆண்டவர் எவ்வளவு இனிமையானவர் என்பதை சுவைப்பீர்கள்!

வாழ்த்துகிறேன்.

– தந்தை வி. இக்னேஷியஸ், சே.ச.

**இயேசுவே ஆண்டவர் - வெளியீடு**

சத்திய நிலையம்,

81, எல். பி. ரோடு, திருவான்மியூர், சென்னை-600 041.

# Yesuve Aandavar Thuthi Geethangal

by
**Dr.Fr.V.Ignatius, S.J.**
81, Lattice Bridge Road,
Thiruvanmiyur,
Chennai - 600 041.

Private Circulation
Tenth Edition
January 2007
5,000 Copies

Printed by
**Dot Line Data**
New No.3, Old No.2,
21st Avenue, Ashok Nagar,
Chennai - 600 083.

# பாடல் அட்டவணை


1. அதிகாலைப் பொழுதில்
2. அப்பா உம்வார்த்தை
3. அம்மா நீ வாழ்க
4. அன்னையே எங்கள் அடைக்கலமே
5. அன்பே என் ஆருயிர் நீரே
6. அன்பான ஆண்டவரே
7. அக்கினி மயமே
8. அக்கினியாம் ஆவியாரே
9. அகிலத்தை மீட்டது
10. அச்சாரமாம் ஆவியாரே
11. அச்சமில்லையே!
12. அஞ்சாதே நீ அஞ்சாதே
13. அபிஷேகம் செய்யும் அப்பா
14. அப்பா பிதாவே ஆராதிக்கின்றோம்
15. அப்பா அப்பா என்று கூப்பிடு
16. ஆண்டவரே உம்முடைய கண் பார்வையில்
17. ஆண்டவரே! ஆண்டவரே!
18. ஆண்டவரே ஆண்டவரே
19. ஆராதனைக்குரியவரே
20. ஆண்டவர் நல்லவர்
21. ஆண்டவரே என் ஆண்டவரே
22. ஆண்டவரே என் தேவனே
23. ஆண்டவர் வரும் நேரமிது
24. ஆண்டவரை நம்பினேன்
25. ஆசைப்படமாட்டேன்
26. ஆமென் அல்லேலூயா
27. ஆராதனை ஆராதனை
28. ஆருயிரே என் ஆறுதலே

29. ஆவியாரே ஆவியாரே
30. ஆவே! மரியே வாழ்க!
31. இதயத்தின் விருப்பத்தை
32. இதயத்தில் வாழும்
33. இரக்கம் நிறைந்தவரே
34. இம்மானுவேலன்
35. இறைவனின் தாயே!
36. இரட்சகரே பொறுத்தருளும்
37. இரத்த வியர்வை சிந்தி
38. இரத்தம் ஜெயமே
39. இயேசுவின் அன்பு இதயத்திலே
40. இயேசுவே ஆண்டவர்
41. இயேசையா உம்மை நம்புகிறேன்
42. இயேசுவின் அன்பு
43. இயேசுவே நீர் ஒருவரே பரிசுத்தர்
44. இயேசுவே மகா பரிசுத்த நேசரே
45. இயேசுவே எனக்குக் கேடயமே
46. இயேசுவே தாவீதின் மகனே
47. இணையற்றத் துணையாளரே
48. உன் பாதம் சேரவேண்டுமே
49. உன்னதத்தின் வல்லமையே
50. உம்மையே நினைக்கணுமே
51. உம்மைத் துதிப்பேன்
52. உம்மை நினைத்து நினைத்து
53. என் உடலும் என் உள்ளமும்
54. என் இயேசுவே என் இயேசுவே
55. என் உயிரே இயேசைய்யா!
56. என் ஆன்மா இறைவனையே
57. என் தெய்வம் இயேசு
58. என் இயேசு ராஜா

59. என் இயேசுவே என் மீட்பரே
60. என் துன்பம் சுமந்தவரே
61. என் ஜீவன் என்பது கிறிஸ்துவே
62. என்னை நடத்தும்
63. என்னை மீட்ட
64. எனது ஜெபத்தைக் கேளும்
65. எழுந்திடு இஸ்ரவேலே
66. எந்த ஆட்சி வந்தாலும்
67. எந்தன் வாழ்வில் இயேசு வந்தார்
68. எந்தன் உள்ளம் ஆர்ப்பரிக்குதே
69. என் ஜனமே என் ஜனமே
70. என்னை நேசிக்கும்
71. எப்போதும் மகிழ்ச்சியாய்
72. எக்காளத் தொனியுடன்
73. எங்கள் ஆண்டவரே
74. என்றென்றும் அழியாத
75. என்னை இப்போது தொடுவீரே
76. ஏங்குகிறேன் அய்யா!
77. ஒருபோதும் கைவிடேன்
78. ஓசான்னா ஓசான்னா
79. ஒரு வார்த்தை சொல்லும்
80. ஓசான்னா தேவனுக்கே
81. ஓசான்னா பாடிடுவோம்
82. கல்வாரி பாதையிலே
83. கவலைப்படாதே மனமே
84. கலங்காதே மனமே திகையாதே
85. கர்த்தாவே உம்மை
86. கர்த்தாவே கர்த்தாவே
87. சரணம் சரணம்
88. சாமக் காவலனாய்

89. சாட்சியக் கூடாரம்
90. சிலுவையில் அறையுண்ட
91. செல்லுவோம் விரைந்து
92. குரல் எழுப்பும் இரத்தமே
93. குணமாக்கும் இயேசைய்யா
94. கேளுங்கள்... கொடுக்கப்படும்
95. கோடி ஸ்தோத்திரம்
96. தெய்வமே இயேசுவே
97. தாருமே அப்பா தாருமே
98. தியாகத்தின் உருவே
99. தேசமே எழுந்திரு
100. ஸ்தோத்திரம் ஐயா ஸ்தோத்திரம்
101. நெஞ்சே நீ புகழ்வாய்
102. தூய ஆவியே!
103. தூய நல்ல பிதாவே
104. தூயத் தண்ணீரே!
105. தூய ஆவியே துணையாக
106. நடந்து வந்த பாதையெல்லாம்
107. நன்றி உமக்கே
108. நன்றி ராஜா
109. நன்றி சொல்லுவேன் என்றும்
110. நண்பனே நண்பனே
111. நித்திய பிதாவே
112. நினைவெல்லாம் நீயே!
113. நேற்றும் இன்றும்
114. நேரம் நெருங்குதே
115. பலியாக வந்த தெய்வமே
116. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
117. பரிசுத்த ஆவியை பெற்றோமே
118. பரிசுத்த ஆவியே

119. பரலோக ராஜனே
120. பரலோக வல்லமை
121. பார்வையெல்லாம் தூய்மையாக்கும்
122. பாடிடுவோம் பாடிடுவோம்
123. பாவியிலும் நான்
124. புதுப் பெயரைத் தந்த தேவன்
125. பிரசன்னம் பிரசன்னம்
126. பொங்கியெழும் ஊற்றே
127. மனமே நீ மறவாதே
128. மனமே மனம்திரும்பு
129. மனமிரங்கும் இயேசுவே
130. மகிமை மன்னனே
131. மகிமை மகிமை
132. மகிமையின் நாமம்
133. மனுக்குலம் மீட்புப் பெற
134. மனிதா மனிதா
135. மனமுருகும் தெய்வம்
136. மாசற்ற கன்னியே
137. மெசியாவே! மெசியாவே!!
138. யாவே யாவே!
139. யாவே யாவே அல்லேலூயாவே
140. வா வா வா! மேலே வா!
141. வாழ்வு தரும் வார்த்தையே
142. வானக வாசல் திறந்துள்ளது
143. வான் படைகளின் ஆண்டவரே
144. வாரும் பரிசுத்த ஆவியே
145. ஜனமே என் ஜனமே
146. யூதகுல சிங்கமே

147. அப்பா நான் உயர்த்துகிறேன்
148. கைத்தாளத்துடனே
149. அடிமையாய் வாழ்ந்தவனே
150. தேவத்திரு அமுதே
151. ஆட்சி செய்யும் அப்பா !
152. கன்னியின் வயிற்றில்
153. தேவமகனே, இயேசுநாதா
154. ஜெபியுங்கள், ஜெபியுங்கள்

## 1. அதிகாலைப் பொழுதில்

அதிகாலைப் பொழுதில்
உன் பாதம் விழுந்து
உம்மையே நாடுகின்றேன்
உம்மழகை காணவே

1. ஆறுதல் உண்டு மகிழ்ச்சி உண்டு
வேதனையில் அவமானத்தில்
இன்பத்திலும் துன்பத்திலும் (2)
உம்மையே நாடினேன்
நிறைவேற்றி தாரும் அய்யா (2)

2. விடுதலை உண்டு சந்தோஷம் உண்டு
கலக்கத்திலும் கவலையிலும்
வியாதியிலும் வேதனையிலும் (2)
உம்மையே நாடினேன்
நிறைவேற்றி தாரும் அய்யா (2)

3. வரங்களும் உண்டு வார்த்தையும் உண்டு
உண்மையிலும் ஆவியிலும்
தாழ்வினிலும் வாழ்வினிலும் (2)
உம்மையே நாடினேன்
நிறைவேற்றி தாரும் அய்யா (2)

## 2. அப்பா உம்வார்த்தை

அப்பா உம்வார்த்தை எனக்கு அப்பம்!
அய்யா உம் இதயம் எனக்கு தஞ்சம்! (2)
அடிமை நான் ஆண்டவரே!
ஆட்கொள்ளும் என்தெய்வமே! (2)

1. மூடவன் நடப்பான் ஊமையும் பேசுவான்
ஏழை எனக்கு ஒரு வார்த்தை சொல்லும் (2)
இயேசுவே ஆண்டவர் என்றுமே சொல்லுமே
இந்த நாடே சொல்லுமே! (2)

2. கடல் அலை அடங்கும் பேய்த்தொல்லை ஒடுங்கும்
ஏழை எனக்கு ஒரு வார்த்தை சொல்லும்
இயேசுவே ஆண்டவர் என்றுமே போற்றுமே
இந்த நாடே போற்றுமே!

3. பாறையை உடைப்பாய் தண்ணீர் தருவாய்
ஏழை எனக்கு ஒரு வார்த்தை சொல்லும்
இயேசுவே ஆண்டவர் என்றுமே பாடுமே
இந்த நாடே பாடுமே

## 3. அம்மா நீ வாழ்க!

அம்மா நீ வாழ்க! அம்மா நீ வாழ்க!
அருள் நிறைந்தவளே ஆண்டவரின் தாயே
அம்மா நீ வாழ்க - எங்கள்
அரசியே நீ வாழ்க! - 2

1. இதோ ஆண்டவரின் அடிமை
என்று சொல்லி வார்த்தையை சுமந்தாயே!
அம்மா நீ வாழ்க!

2. உன்னத வல்லமை நிழலிடவே
திருமகனை நீ ஈன்றாயே!
அம்மா நீ வாழ்க!

3. கூழியின் தலையை மிதித்தவளே
மூஉலகாளும் (ராக்கினியே)
அம்மா நீ வாழ்க!

4. திருமண வேளையில் பரிந்துரைத்தே
கனிரசம் எமக்கு அருள்வாயே!
அம்மா நீ வாழ்க!

## 4. அன்னையே எங்கள் அடைக்கலமே

அன்னையே எங்கள் அடைக்கலமே
அண்டிவந்தோம் உம்மிடமே! -2
ஆதரிப்பாய் அரவணைப்பாய்
எம்மை என்றும் காத்திடுவாய்! -2

1. உன்னத வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டவளே
இறைவனின் சிந்தையிலே நிலைத்து நிற்பவளே! -2
உம் உதவி நாடிவந்தோம்
உம் பாதம் பணிந்து நின்றோம்
தயவுடன் எமக்கு செவிசாய்த்தருளும்!

2. நித்திய திருச்சுதனை தாங்கி சுமந்தவளே
தூய கன்னிகையே எங்களின் நம்பிக்கையே! -2
உம் உதவி நாடிவந்தோம்
உம் பாதம் பணிந்து நின்றோம்
தயவுடன் எமக்கு செவிசாய்த்தருளும்!

3. கல்வாரி பாதத்திலே கண்ணீர் வடித்தவளே
கனிவாய் பார்ப்பவளே பரிந்து உரைப்பவளே! -2
உம் உதவி நாடிவந்தோம்
உம் பாதம் பணிந்து நின்றோம்
தயவுடன் எமக்கு செவிசாய்த்தருளும்!

## 5. அன்பே என் ஆருயிர் நீரே

அன்பே என் ஆருயிர் நீரே
கண்ணே என் செல்வமும் நீரே (2)
என் இதயம் கவர்ந்த
என் உயிரில் கலந்த
உடல் தந்து நடத்தினீர்
மண்ணகத்தில் வாழும் எங்கள் நல்லதேவனே
உம் அருகில் வாழ்ந்திருப்பேன் (2)

1. விடியலில் என் குரலைக் கேட்டவரே
வைகறையில் உமக்காய் காத்திருப்பேன் (2)
அதிசயங்கள் செய்து என்னை நிரப்பி
உம் அன்பில் வாழச் செய்தீர் (2)

2. வாழ்வு தரும் உணவும் நீதானய்யா
வாழவைக்கும் தெய்வமும் நீதானய்யா (2)
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
காத்தால் அணைத்தவரே (2)

3. மண்ணில் எழும் காற்றும் நீதானய்யா
தீயின் தரும் ஒளியும் நீதானய்யா (2)
வா என்று சொல்லி என்னோடு பேசி
எனக்காய் நின்றீரே (2)

## 6. அன்பான ஆண்டவரே

அன்பான ஆண்டவரே
ஆருயிர் தெய்வமே
ஆறுதல் தருபவரே
ஆராதனை செய்கிறோம்
ஆராதனை (2)
தெய்வமே ஆராதனை
உமக்கே ஆராதனை

1. இருந்தவரும் இருப்பவரும்
வருபவரும் நீரே!
உயர்ந்தவரும் உன்னதரும்
வல்லவரும் நீரே!

2. அப்பத்திலும் இரசத்திலுமே
வாழ்பவரும் நீரே!
வார்த்தையிலும் வேதத்திலும்
இருப்பவரும் நீரே!

3. மகிமையிலும் மாட்சியிலும்
வருபவரும் நீரே!
பரிசுத்தரும் பார்ப்பவரும்
நல்லவரும் நீரே!

## 7. அக்கினி மயமே

அக்கினி மயமே பரிசுத்த ஆவியே
எரிதணலாய் எழும்பிடுவீர்
அப்பா நிரப்பிடுவீர்

1. அணைப்பவரே ஆறுதல் தருபவரே
அதிசயம் செய்பவரே
எங்கள் துணை நீரே

2. எந்தன் உள்ளம் பாழாய் போனதய்யா
புதிய இதயத்தையே
என்னுள் மலரச் செய்வீர்

3. அபிஷேக முத்திரை ஆனவரே
சாட்சியாய் வாழ்ந்திடவே
அன்பாய் வழி நடத்தும்

4. நோய்களெல்லாம் உடனே தீருமய்யா
அரிய வரங்களையே
எமக்கு தாருமைய்யா

5. [illegible]
[illegible]
[illegible]

6. [illegible]
[illegible]
[illegible]

## [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] – 2

1. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

2. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

3. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

4. நிறைவாய் வருவாயே
அபிஷேகம் செய்வாயே
வல்லமை பொழிந்து
அன்பினால் நிரப்பி
முற்றும் என்னை மாற்றுவீரே!

## 9. அகிலத்தை மீட்டது

அகிலத்தை மீட்டது இந்த சிலுவை
ஆண்டவர் அமர்ந்தது இந்த சிலுவை
அதிசயம் புரிந்தது இந்த சிலுவை
அற்புதமானது இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

1. மறுமை வழியாய் வந்த சிலுவை
மகனாய் மாற்றிய இந்த சிலுவை
மன்னிப்பு அளித்தது இந்த சிலுவை
மகத்துவம் நிறைந்தது இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

2. உயிரை மீட்டது இந்த சிலுவை
உண்மைக்கு சாட்சி இந்த சிலுவை
உறுதியைத் தருவது இந்த சிலுவை
உறுதுணையானது இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

3. துன்பத்தை விரட்டும் இந்த சிலுவை
துயரத்தை மாற்ற வந்த சிலுவை
பிதாவைக் காட்டும் இந்த சிலுவை
பிரிவினை போக்கவந்த இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

4. பரிகார பலியான இந்த சிலுவை
பரலோக வாழ்வு தந்த இந்த சிலுவை
முதலும் முடிவும் இந்த சிலுவை
முடிவில்லா வழியாகவந்த இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

5. பெயர் சொல்லி அழைத்தது இந்த சிலுவை
பேரின்ப வாழ்வு தரும் இந்த சிலுவை
சீடராய் மாற்றும் இந்த சிலுவை
சாட்சியாய் ஆக்கும் இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

6. காலத்தை மாற்றும் இந்த சிலுவை
கலக்கத்தைப் போக்கும் இந்த சிலுவை
ஆறுதல் தருவது இந்த சிலுவை
ஆவியைப் பொழிவது இந்த சிலுவை
சிலுவை மீட்பின் சிலுவை - 4

## 10. அச்சாரமாம் ஆவியாரே

அச்சாரமாம் ஆவியாரே - எனக்கு
அபிஷேகம் தருவாயே!
அப்பா என்று அழைக்கும் ஆவியாரே
அதிசயம் செய்வாய் ஆவியாரே!
பரிசுத்த ஆவியாரே பரலோக ஆவியாரே!

1. பாவத்தைப் பொறுப்பாய் பகையை ஒழிப்பாய்
பரிசுத்தம் ஆக்கிடுவாய்
பாசத்தைப் பொழிவாய்
பரிவுடன் பார்ப்பாய்
உயிராய் தங்கிடுவாய்!
பரிசுத்த ஆவியாரே பரலோக ஆவியாரே!

2. பேய்களை ஓட்டி பயங்களை போக்கி
நோய்களை தீர்த்திடுவோம்
கசப்புகள் நீக்கி கல்மனம் கரைத்து
அருள் மழை பொழிந்திடுவோம்!

3. கவலைகள் போக்கி கனிவாய் பார்த்து
துணையாய் வந்திடுவோம்
நெஞ்சினில் நிறைந்து இனிதாய் வந்து
நதியாய் பாய்ந்திடுவோம்!

## 11. அச்சமில்லையே!

அச்சமில்லையே எனக்கு அச்சமில்லையே
ஆண்டவர் இயேசு இருப்பதனால்!

1. துன்பங்கள் ஆயிரம் வந்தாலும், அச்சமில்லை (3)
தீமைகள் என்னை எதிர்த்தாலும், அச்சமில்லை (3)

2. நோய்கள் என்னை வதைத்தாலும்..........
நண்பர்கள் என்னை வெறுத்தாலும்..........

3. உலகம் என்னை பழித்தாலும்..........
பலரும் என்னை நகைத்தாலும்..........

4. பேய்கள் தொல்லை கொடுத்தாலும்..........
பகைவர் என்னை சூழ்ந்தாலும்..........

5. வெள்ளம் பெருகிப் பாய்ந்தாலும்..........
அலைகள் பொங்கி வந்தாலும்..........

6. வஞ்சக சாட்சிகள் எழுந்தாலும்..........
நாவால் சுட்டு எரித்தாலும்..........

## 12. அஞ்சாதே நீ அஞ்சாதே

அஞ்சாதே நீ அஞ்சாதே
விசுவசித்தால் நீ குணம் பெறுவாய்
ஆனந்தம் அல்லேலூயா - 2

1. பெரும்பாடு உள்ளவள் குணமானாள்
தொழுநோய்கள் கண்டவர் குணமானார்
விசுவசித்தால் நீயும் இன்று குணம் பெறுவாய்
விசுவசித்து நாமும் இன்று குணமடைவோம்

2. விபச்சார பெண்ணும் மீட்படைந்தாள்
விம்மி அழுதவள் இரக்கம் பெற்றாள்

3. பார்வை இழந்தவன் ஒளிப் பெற்றான்
செவிடர் இயேசுவின் குரல் கேட்டார்

4. யாயீர் மகளும் உயிர் பெற்றாள்
இறந்த லாசர் எழுந்து வந்தான்

5. திமிர்வாதம் உள்ளவன் நடந்து சென்றான்
விஷக் காய்ச்சல் உள்ளவள் குணமடைந்தாள்

6. நீங்களும் நானும் விசுவசித்தால்
இயேசுவின் வல்லமை இறங்கிடுமே
விசுவசித்து இன்று நாமும் குணமடைவோம்.

## 13. அபிஷேகம் செய்யும் அப்பா

அபிஷேகம் செய்யும் அப்பா
பரிசுத்த ஆவி தந்து - எம்மை
அபிஷேகம் செய்யுமே
ஆனந்தம் அல்லேலூயா

1. பாவ இருள்கள் நீங்கவே - எனக்கு
ஞானத்தின் ஒளியைத் தாருமே

2. வர்மம் கோபம் ஒழியவே - என்னில்
பரிவும் பாசமும் வளரவே
3. வேதனை துன்பம் தீரவே - எனக்கு
ஆறுதல் சமாதானம் வரணுமே
4. பிரிவுகள் பிணக்குகள் மறையவே - எனக்கு
பரிசுத்த வல்லமை ஊற்றுமே
5. பேய்கள் தூரமாய் ஓடவே - எனது
நோய்கள் உடனே தீரவே
6. இயேசு நெஞ்சில் தங்கவே - என்னில்
கிருபை பொங்கி வழியவே

## 14. அப்பா பிதாவே ஆராதிக்கின்றோம்

அப்பா பிதாவே ஆராதிக்கின்றோம்
அன்பர் இயேசுவே ஆராதிக்கின்றோம்
தூய ஆவியில் பெருமூச்சுடனே
தாழ் பணிந்து ஆராதிக்கின்றோம்

1. என்னைக் காப்பவரே ஆராதனை செய்கிறோம்
அரணாய் இருப்பவரே ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் விடுதலை அளிப்பவரே
ஆராதனை செய்கிறோம்
அன்பினால் என்னை அழைத்தவரே
ஆராதனை செய்கிறோம்
2. என்னை அணைத்தவரே ஆராதனை செய்கிறோம்
ஆறுதல் அளிப்பவரே ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் என்னை தேற்றுவீரே
ஆராதனை செய்கிறோம்
கரங்களில் என்னைத் தாங்குவீரே
ஆராதனை செய்கிறோம்

3. கவலைகள் போக்குவீரே ஆராதனை செய்கிறோம்
கண்ணீர் துடைப்பவரே ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் மகிழ்ச்சி தந்தவரே
ஆராதனை செய்கிறோம்
மகன் என்ற உரிமை தந்தவரே
ஆராதனை செய்கிறோம்

4. என் பாவம் போக்கிவிட்டீர் ஆராதனை செய்கிறோம்
என் நோய்கள் சுகமாக்கினீர் ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் என்னை மீட்டுவிட்டீர்
ஆராதனை செய்கிறோம்
பரிமள தைலம் பூசிவிட்டீர் ஆராதனை செய்கிறோம்

5. தடைகளை அகற்றிவிட்டீர் ஆராதனை செய்கிறோம்
கட்டுகளை அவிழ்த்துவிட்டீர் ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் வாழ்வு கொடுத்தவரே
ஆராதனை செய்கிறோம்
தாழ்நிலை போக்கி உயர்த்தினீரே
ஆராதனை செய்கிறோம்
பரிசுத்த தூயவரே ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் உலகை படைத்தீரே
ஆராதனை செய்கிறோம்
அன்பினால் உலகில் வந்தவரே
ஆராதனை செய்கிறோம்

6. உத்தமர் உன்னதரே ஆராதனை செய்கிறோம்
வல்லவர் நல்லவரே ஆராதனை செய்கிறோம்
வார்த்தையால் ஆவியைத் தந்தவரே
ஆராதனை செய்கிறோம்
அபிஷேகம் செய்து மகிழ்ந்தவரே
ஆராதனை செய்கிறோம்

## 15. அப்பா அப்பா என்று கூப்பிடு

அப்பா அப்பா என்று கூப்பிடு மகனே
ஆண்டவர் உன்னை ஆதரிப்பார்!
அப்பா அப்பா என்று துதித்திடு மகளே
அவர் உன்னை என்றும் காத்துக் கொள்வார்

1. பாவங்கள் பலவே செய்தேனய்யா
பாவி என்னை மன்னித்தாயே!
தெய்வமே நன்றி ஐயா - 2
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே - 2

2. கொடிய நோய்கள் அகன்றதய்யா!
உன்னத வல்லமை பொழிந்தாயே

3. பழிச்சொல் கேட்டு திகைத்தேனய்யா
பாசத்தைப் பொழிந்து தேற்றினாயே!

4. வேதனை நெருப்பில் துடித்தேனய்யா
ஆறுதல் தந்து அணைத்தாயே!

5. அமைதி தேடி அலைந்தேனய்யா
நண்பராய் வந்து சந்தித்தாயே!

6. தனிமையில் வாடித் தவித்தேனய்யா
தாயாக வந்து அணைத்தாயே!

## 16. ஆண்டவரே உம்முடைய கண் பார்வையில்

ஆண்டவரே உம்முடைய கண்பார்வையில்
என்னையுமே நிறுத்தும்!
என்னையுமே நிறுத்தும்!

1. எந்தன் கண்ணீரே எனக்கு உணவு
திணம் திணம் துயரமே எனக்கு வாழ்வு!
கண்ணோக்கிப் பார்த்தருளும்
நினைவுக் கூர்ந்தருளும் - என்னைக்
காத்தருளும்!

2. எந்தன் உறவே எனக்கு பாரம்
பழியும் பேச்சும் எனக்கு துயரம்!

3. எந்தன் உடலே எனக்கு கவலை
நோயும் நொடியும் எனக்கு கலக்கம்!

4. எந்தன் நாவே எனக்கு வீழ்ச்சி!
இந்த உலகமே எனக்கு சூழ்ச்சி!

## 17. ஆண்டவரே! ஆண்டவரே!

ஆண்டவரே ஆண்டவரே
மீட்புத்தரும் பாறை - 2
இந்த உலகத்தையே காத்தருளும்
இந்த உலகினைக் காத்தருளும்!

1. பூமியின் ஆழங்களும்
அவருக்கு சொந்தமே
உன்னத மலைகளும்
அவருக்கு சொந்தமே! அல்லேலூயா (3)

2. மண்ணக மாந்தர்களும்
அவருக்கு சொந்தமே
வானகத் தூதர்களும்
அவருக்கு சொந்தமே! அல்லேலூயா (3)

3. உயிரும் உணர்வுகளும்
அவருக்கு சொந்தமே
உடலும் உடமைகளும்
அவருக்கு சொந்தமே! அல்லேலூயா (3)

## 18. ஆண்டவரே ஆண்டவரே

ஆண்டவரே ஆண்டவரே!
அடிமை என்னைப் பாரும் அய்யா! (2)

1. வல்லமையான தெய்வமே
மனப்புண் எல்லாம் ஆற்றுமய்யா
வார்த்தையான தேவனே
தலை நோய் எல்லாம் தீரும் அய்யா!

2. கருணை உள்ள மனுஉருவே
கண்வலி எல்லாம் ஆற்றுமய்யா!
காயம் தாங்கிய மீட்பரே
இதயத்தின் நோயைத் தீரும் அய்யா!

3. இரத்தம் சிந்திய செம்மறியே
குடல் புண் எல்லாம் ஆற்றும் அய்யா!
சிலுவையில் மரித்த மெசியாவே
உடல் நோய் எல்லாம் போக்கும் அய்யா!

## 19. ஆராதனைக்குரியவரே

ஆராதனைக்குரியவரே
அப்பா ஸ்தோத்திரம்!
அதிசயமானவரே இயேசுவே
ஸ்தோத்திரம்! - 2
ஆவியானவரே அபிஷேக நாதரே - 2
உமக்கே ஸ்தோத்திரம்! - (4)

1. பகலெல்லாம் இரவெல்லாம்
அழுகின்றேன் ஐயா - 2
உம்பாதம் விழுந்து
கண்ணீரால் நனைத்து
உம்மையே நினைக்கின்றேன்!
உமக்காய் வாழ்கின்றேன்!

2. உலகெல்லாம் படைத்தவரே
பரிசுத்தமானவரே
பாவத்தைக் களைந்து
தூய்மையை அணிந்து
உம்மையே துதிக்கின்றேன்
உமக்காய் வாழ்கின்றேன்!

3. ஆலோசனைத் தருபவரே
அனைத்திலும் பெரியவரே
அனைத்தையும் இழந்து
ஆவியில் நிறைந்து
உமக்காய் துடிக்கின்றேன்
உமக்காய் வாழ்கின்றேன்!

4. துன்பத்திலும் துயரத்திலும்
துணையாய் இருப்பவரே
உலகத்தை மறந்து
சிலுவையை சுமந்து
உம்மையே பார்க்கின்றேன்
உமக்காய் வாழ்கின்றேன்!

5. போகும்போதும் திரும்பும்போதும்
என்னைக் காப்பவரே
பக்தியை நினைத்து
கரங்களை உயர்த்தி
உம்முகம் நோக்கினேன்
உமக்காய் வாழ்கின்றேன்!

## 20. ஆண்டவர் நல்லவர்

ஆண்டவர் நல்லவர் என்று பாடுவோம்
அவர் நாமம் அதிசயம் என்று துதிப்போம்
பாக்கியமே பரவசமே
என்றும் ஆனந்தமே!

1. எளிமை மனத்தோர் பேறுபெற்றோர்
விண்ணக அரசு அவர்களதே!

2. துன்பத்தில் துடிப்பவர் பேறுபெற்றோர்
தெய்வீக ஆறுதல் அவர் பெறுவர்!

3. சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்
கடவுளின் வல்லமை அவர் பெறுவர்!

4. நேரிய மனத்தோர் பேறுபெற்றோர்
உள்ளத்தில் நிறைவு அவர் பெறுவர்!

5. இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்
ஆண்டவர் இரக்கம் அவர் பெறுவர்!

6. தூய்மை உள்ளத்தோர் பேறுபெற்றோர்
அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்!

7. சாந்தம் உடையோர் பேறுபெற்றோர்
அமைதியில் இன்பம் காண்பார்கள்!

8. நீதிமான்கள் பேறுபெற்றோர்
விண்ணகக் கொடைகள் அவர் பெறுவார்!

## 21. ஆண்டவரே என் ஆண்டவரே

ஆண்டவரே என் ஆண்டவரே
உமக்காக ஏங்குகிறேன்!
என்னை மீட்டருளும்.
தயவாய் காத்தருளும்

1. உலகம் எல்லாம் மாயை அய்யா
சொந்தம் பந்தம் வேண்டாம் அய்யா
உம் கிருபை போதும் அய்யா
வேறேதும் வேண்டாம் அய்யா!

2. உடலும் சுகமும் அழியும் அப்பா
பணமும் பதவியும் வேண்டாம் அப்பா
உம் அன்பு போதும் அப்பா
வேறேதும் வேண்டாம் அப்பா!

3. உலகக்கவலை இழுக்குதப்பா
பெருமையும் புகழும் வேண்டாம் அப்பா
உம்விருப்பம் போதும் அப்பா
வேறேதும் வேண்டாம் அப்பா!

## 22. ஆண்டவரே என் தேவனே

ஆண்டவரே என் தேவனே
உமக்கே ஆராதனை - 2

1. பரிசுத்தரே உமக்கே ஆராதனை
தூயவரே உமக்கே ஆராதனை
துதிகன மகிமை எல்லாம் - அப்பா
உமக்கே செலுத்துகிறோம்

2. உன்னதரே உமக்கே ஆராதனை
உத்தமரே உமக்கே ஆராதனை

3. வல்லவரே உமக்கே ஆராதனை
நல்லவரே உமக்கே ஆராதனை

4. இறை அரசே உமக்கே ஆராதனை
இறை மகனே உமக்கே ஆராதனை

5. எகோவாயீரே உமக்கே ஆராதனை
எகோவாநிசி உமக்கே ஆராதனை

6. இருந்தவரே உமக்கே ஆராதனை
இருப்பவரே உமக்கே ஆராதனை

7. ஆல்பாவே உமக்கே ஆராதனை
ஒமெகாவே உமக்கே ஆராதனை

8. இம்மானுவேலே உமக்கே ஆராதனை
மெசியாவே உமக்கே ஆராதனை

9. ஆறுதலே உமக்கே ஆராதனை
அதிசயமே உமக்கே ஆராதனை

## 23. ஆண்டவர் வரும் நேரமிது

ஆண்டவர் வரும் நேரமிது
ஆனந்தம் ஆனந்தமே - 2
விழிப்பாய் நாம் காத்திருந்து
விளக்கு ஏந்துவோமே - 2
அல்லேலூயா அல்லேலூயா

1. மகிமையின் மன்னரை ஆர்ப்பரிப்போம்
மணவாளன் இயேசுவைத் துதித்திடுவோம்
குயவன் கையில் களிமண் போல்
கர்த்தரின் கையில் நாமிருப்போம் - 2

2. வரங்களைத் தருகின்ற வல்லவரே
புதுமைகள் எமக்கு செய்பவரே - 2
வார்த்தையால் பேயை ஓட்டுவீரே
வல்லமையால் எம்மை நடத்துவீரே - 2

3. இரக்கம் உருக்கம் உள்ளவரே
எங்கள் பாவநோயைத் தீர்ப்பவரே
பரிசுத்த ஆவியை ஊற்றுவீரே
பரிசுத்தமாய் எம்மைக் காப்பீரே - 2

## 24. ஆண்டவரை நம்பினேன்

ஆண்டவரை நம்பினேன்
அவர் என் ஜெபம் கேட்டார்
சந்தோஷமே அப்பா சந்தோஷமே
எனக்கு சந்தோஷமே - அல்லேலூயா

1. சேற்றில் நான் கிடந்தேனே
அப்பா தூக்கி எடுத்தீரே
தழுவி என்னை அணைத்தீரே!
எனக்கு சந்தோஷமே - அல்லேலூயா
எனக்கு சந்தோஷமே!

2. சோர்ந்து நான் போனேனே
அப்பா என்னைத் தேற்றினீரே
காயங்கள் கட்டி விட்டீரே!
எனக்கு சந்தோஷமே!

3. இருளில் நான் நடந்தேனே
அப்பா கண்டு கொண்டீரே
ஒளிக்கு என்னை அழைத்தீரே!
எனக்கு சந்தோஷமே

4. தாகத்தால் மடிந்தேனே
அப்பா ஆவியை ஊற்றினீரே
நதியாய் என்னில் பாய்வீரே
எனக்கு சந்தோஷமே

5. வலிமை நான் பெறுவேனே
அப்பா கழுகுபோல் பறப்பேனே
நாளும் உம்மை துதிப்பேனே
எனக்கு சந்தோஷமே

# 25. ஆசைப்படமாட்டேன்

1. ஆசைப்படமாட்டேன்
அதிகம் சேர்க்கமாட்டேன் - (2)
ஆண்டவரை நம்புவேன்
அவரையேத் தேடுவேன்
அவரோடு நடப்பேன்! என்றும்
அவரோடு நடப்பேன்

அப்பத்தினால் அல்ல மகனே!
மனிதன் பிழைப்பான்
ஆண்டவரின் வார்த்தையினால்தான் பிழைப்பான் (2)
கண்ணீர் சிந்தி ஜெபிப்பேன்
கருத்தாய் நாளும் இருப்பேன்
இன்றும் என்றும்
தேவ ஆவியில் வாழ்வேன்! (2)

2. கவலைப்படமாட்டேன்
கடனே வாங்கமாட்டேன்
ஆண்டவரை நம்புவேன்
அவரையேத் தேடுவேன்
அவரோடு நடப்பேன்!
என்றும் அவரோடு நடப்பேன்!
கர்வத்தினால் அல்ல மகனே!
மனிதன் பிழைப்பான்
ஆண்டவரின் இரத்தத்தினால்தான் பிழைப்பான்
துன்பம் எதையும் சகிப்பேன்
அன்பாய் நாளும் இருப்பேன்
இன்றும் என்றும்
தேவ ஆவியில் வாழ்வேன்

## 26. ஆமென் அல்லேலூயா

ஆமென் அல்லேலூயா - 4
பரிசுத்தரே எந்தன் பரிசுத்தரே
பரிசுத்தமாக்கும் என்னை பரிசுத்தரே - 2

1. அன்பின் இயேசுவே பரிசுத்தரே
அமைதியின் இருப்பிடம் பரிசுத்தரே - 2
உத்தமர் உன்னதர் பரிசுத்தரே
வல்லவர் நல்லவர் பரிசுத்தரே - 2

2. வல்லமை நிறைந்தவர் பரிசுத்தரே
வாழ்வை அளிப்பவர் பரிசுத்தரே - 2 (உத்தமர்)

3. பாவம் போக்கும் பரிசுத்தரே
ஆவியைப் பொழியும் பரிசுத்தரே - 2 (உத்தமர்)

4. ஆறுதலின் தெய்வம் பரிசுத்தரே
அடைக்கலம் தருபவர் பரிசுத்தரே - 2 (உத்தமர்)

## 27. ஆராதனை ஆராதனை

ஆராதனை ஆராதனை
ஆவியில் ஆராதனை
ஆராதனை ஆராதனை
உண்மையில் ஆராதனை - என்றும் (2)

1. தூதர்கள் மத்தியில் வாழ்பவரே
தூயவர் நீரே நல்லவரே
தூய நீரால் கழுவி எம்மை
துதிக்கும் ஆவியை அளிப்பவரே!

2. இயேசுவே ஒருவரே ஆண்டவர்
இயேசுவே ஒருவரே பரிசுத்தர்
இயேசுவே ஒருவரே உன்னதர்
இறைமகன் இவரையே ஆராதிப்பேன்!

3. உமக்காய் அனைத்தையும் இழந்துவிட்டேன்
உமக்காய் என்றும் வாழ்ந்திடுவேன்
உந்தன் அருகில் எந்நேரமும்
வாழ்வது எத்தனை பாக்கியமே!

4. உயிருள்ள தேவனைத் துதித்திடுவேன்
உயிர்வாழும் நாளெல்லாம் துதித்திடுவேன்
உள்ளத்தில் உறையும் உன்னதரை
மகிழ்ந்து புகழ்ந்து ஆராதிப்பேன்!

5. இயேசுவே உம்மையே நேசிக்கிறேன்
இயேசுவே உம்மையே நம்புகிறேன்
இயேசுவே உம்மையே தாழ்பணிந்து
இரவும் பகலும் துதித்திடுவேன்

6. காணாமல் போன ஆடு என்னை
கருணையால் தேடி மீட்டவரே
கண்மணி போல் என்னைக் காப்பவரே
காலமெல்லாம் உம்மைத் துதித்திடுவேன்!

## 28. ஆருயிரே என் ஆறுதலே

ஆருயிரே என் ஆறுதலே
பரிசுத்தரே இரட்சகரே
நன்றி நன்றி ஐயா (2)

1. தாயின் கருவில் என்னை பார்த்தீரே
தாசனாய் என்றும் என்னை காப்பீரே
நன்றி ஐயா நன்றி ஐயா
ஜீவித நாளெல்லாமே

2. இளமையில் நம்பிக்கை எனக்கு அளித்தீரே
முதுமையில் வல்லமை எனக்கு தருவீரே

3. அடிமை என்னை மீட்டுக் கொண்டீரே
மகனாய் என்னை உயர்த்தி பிடித்தீரே
4. உள்ளங்கையில் என்பெயர் எழுதியுள்ளீரே
உமது தோளில் என்னை சுமக்கின்றீர்
5. மகிமையின் நாளில் திரும்பி வருவீரே
என்னையும் கூடவே அழைத்துச் செல்வீரே

## 29. ஆவியாரே ஆவியாரே

ஆவியாரே ஆவியாரே
பரிசுத்த ஆவியாரே
பரிந்து உரைப்பவரே!
அக்கினியாய் இறங்கும்
அபிஷேகம் தாரும்
அதிசயமானவரே ஆன்மாவின்
துணையாளரே!

1. பாவ வினையைத் தீர்ப்பவரே
காயம் எல்லாம் கட்டுவீரே
பரிசுத்தம் ஆக்குவீரே
வல்லமை ஆனவரே!
2. வறுமையுற்ற நிலையில் வருபவரே
இனிய உயிராய் இருப்பவரே
பரிசுத்தம் ஆக்குவீரே—
3. வேதவசனம் பேசுவீரே
கொடிய பேய்கள் ஓட்டுவீரே
பரிசுத்தம் ஆக்குவீரே—
4. ஞானக் கொடைகள் ஈபவரே
நெஞ்சம் எல்லாம் பொங்குவீரே
பரிசுத்தம் ஆக்குவீரே—

5. ஜீவ நதியாய் பாய்பவரே
நோய்கள் எல்லாம் நீக்குவீரே
பரிசுத்தம் ஆக்குவீரே....

6. தூய நெருப்பாய் தோன்றுவீரே
பயங்கள் எல்லாம் போக்குவீரே
பரிசுத்தம் ஆக்குவீரே....

## 30. ஆவே! மரியே வாழ்க!

ஆவே! மரியே வாழ்க! (4)
பாதம் பணிந்தோம் தாயே!
கன்னி மாமரியே!
கனிவுடன் பார்ப்பாய் அம்மா
நீயே எம்மையே!

1. அன்னையே அருள் நிறைந்தவளே
ஆண்டவரை சுமந்தவளே - 2
புவி வாழும் எம்மையே
காத்திடுவாய் என்றும்
காத்திடுவாய் (2) ஆவே....

2. தூய்மையே தியாகத்தின் உருவே
மகனைப் பலிகொடுத்தவளே - 2
உடன்படிக்கை பேழையே
வேண்டிடுவாய் என்றும்
வேண்டிடுவாய் (2) ஆவே....

3. பெண்களில் பேறுபெற்றவளே
கதிரவனை அணிந்தவளே - 2
கடுந்துயரில் துடிக்கின்றோம்
தாங்கிடுவாய் எம்மை
தாங்கிடுவாய்! (2) ஆவே...

## 32. இதயத்தில் வாழும்

இதயத்தில் வாழும் இறைவனே
நிறைந்த அன்புடன் வருகின்றோம்
அப்பமுமாய் ரசமுமாய்
எல்லாம் தருகின்றோம்
ஏற்றருள் இறைவனே! -2

1. கிழித்த உடலையே
உணவாக தந்தீரய்யா! -2
சிதைந்த எங்கள் உடலையே
அப்பமாய் எடுத்து வந்தோமய்யா -2
எல்லாம் தருகின்றோம்
ஏற்றருள் இறைவனே!

2. உமது குருதியையே
உயிர் வாழத் தந்தீரய்யா -2
நனைந்த எங்கள் உயிரையே
ரசமாய் ஏந்திவந்தோம் அய்யா -2
எல்லாம் தருகின்றோம்
ஏற்றருள் இறைவனே!

3. ஆபேலின் காணிக்கையை
கண்கொண்டு பார்த்தீரய்யா -2
அடியவர் எமது காணிக்கையை
அன்பாய் கனிவாய் ஏற்பீரய்யா -2
எல்லாம் தருகின்றோம்
ஏற்றருள் இறைவனே!

## 33. இரக்கம் நிறைந்தவரே

இரக்கம் நிறைந்தவரே! இயேசையா!
என்னைப் பாரும்!
தயவாய் குணமாக்கும்!
என்னை குணமாக்கும்!

1. தொடுமே தொடுமே தொழுநோய் தீருமே!
பாருமே பாருமே என்பாவம் தீருமே!
தெய்வமே பரிசுத்தமே
இறைமகனே என் இராஜனே!

2. தொடுமே தொடுமே மனநோய் தீருமே
பாருமே பாருமே என்குறை தீருமே!

3. வாருமே வாருமே இதயத்தில் தங்குமே
கேளுமே கேளுமே என்ஜெபம் கேளுமே!

4. பேசுமே பேசுமே இரசமாய் மாறுமே
ஊற்றுமே ஊற்றுமே உம்ஆவி பாடுமே!

## 34. இம்மானுவேலன்

ஆ — ஆ — அல்லேலூயா (2)
இம்மானுவேலன் என் தேவன் இராஜனை
வாழ்த்திப் போற்றிடுவேன்! (2)
தூயவர் பரிசுத்தர் வல்லவர் நல்லவர் - (2)
ஆ — ஆ — அல்லேலூயா (2)

1. எனக்காக பலியான செம்மறியே
என் இதயம் கவர்ந்த நேசரே! (2)
மாட்சியும் மகிமையும்
உமக்கே என்றென்றும் உமக்கே!

2. மனுக்குலம் உயிர்பெற வந்தவரே
அச்சாரமாம் ஆவியாரை தந்தவரே!
3. தந்தையின் வலபக்கம் இருப்பவரே
மேகத்தில் திரும்பவும் வருபவரே!
4. வானமும் பூமியும் படைத்தவரே
அனைத்தையும் ஆட்சி செய்பவரே!

## 35. இறைவனின் தாயே!

இறைவனின் தாயே!
இரக்கத்தின் அரசியே!
அம்மா உம்மை வாழ்த்துகிறோம்!
அம்மா உம்மை வணங்குகின்றோம்

1. அருள்நிறை மரியே மாதாவே
இயேசுவை சுமந்தத் தாய்மரியே!
இதயத்தில் வா! இதயத்தில் வா!
இயேசுவை சுமந்து நீ வா! (அம்மா)
2. சிலுவையின் அடியில் நின்றவளே
இயேசுவை பலியாய் கொடுத்தவளே!
இதயத்தில் வா! இதயத்தில் வா!
இயேசுவை சுமந்து நீ வா! (அம்மா)
3. பிள்ளைகள் குரலை கேட்பவளே
பாசமாய் என்றும் பார்ப்பவளே
இதயத்தில் வா! இதயத்தில் வா!
இயேசுவை சுமந்து நீ வா! (அம்மா)
4. அன்பாய் எம்மை அணைப்பவளே
ஆறுதல் எமக்குத் தருபவளே!
இதயத்தில் வா! இதயத்தில் வா!
இயேசுவை சுமந்து நீ வா! (அம்மா)

## 36. இரட்சகரே பொறுத்தருளும்

இரட்சகரே பொறுத்தருளும்
எம்மை பொறுத்தருளும்

1. பரிசுத்த சிலுவையை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
சத்துருவை விரட்டும் ஐயா

2. உமது இரத்தத்தை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
மன்னிப்பு தாரும் ஐயா

3. ஐந்து காயங்களை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
மீட்பு தாரும் ஐயா

4. அன்னையின் கண்ணீரை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
கிருபை தாரும் ஐயா

5. அன்னையின் தூய்மையை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
ஆவியைத் தாரும் ஐயா

6. அன்னையின் இதயத்தை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
சமாதானம் தாரும் ஐயா

7. அன்னையின் ஜெபத்தை ஆயுதமாக்கி
ஆண்டவரே உம்மை கெஞ்சுகிறேன்
வல்லமையைத் தாரும் ஐயா

# 37. இரத்த வியர்வை சிந்தி

இரத்த வியர்வை சிந்தி எனக்காய் - 2
நொந்து அழுத நல்ல இயேசுவே - 2
எம்மேல் இரக்கம் வையும் - 2

1. என் கண்கள் செய்த பாவம்
உம்மை காட்டி கொடுத்தது
என் உதடுகள் செய்த பாவம்
உம்மை மறுத்திடசெய்தது

2. என் செவிகள் செய்த பாவம்
உம் வார்த்தையை மறுத்தது
என் கரங்கள் செய்த பாவம்
திருக் கரங்களை கட்டியது

3. என் கால்கள் செய்த பாவம்
தூய வழிகளை அடைத்தது
என் சிந்தனை நினைத்த பாவம்
உம் சிரசைக் குத்தியது

4. என் இதயம் செய்த பாவம்
உம்மை சிலுவையில் அறைந்தது
என் உறுப்புகள் செய்த பாவம்
உம் உடலை சிதைத்தது

5. என் உணர்வுகள் செய்த பாவம்
உம் விலாவைப் பிளந்தது
என் உணர்ச்சிகள் செய்த பாவம்
உம்மை காறி துப்பியது

# 38. இரத்தம் ஜெயமே

இரத்தம் ஜெயமே இரத்தம் ஜெயமே
இயேசுவின் இரத்தம் ஜெயமே!
மாசற்ற செம்மறியே
மகிமை நாயகனே!

1. உலகத்தை மறப்போம்
பாவத்தை வெறுப்போம்
இயேசுவை துதித்திடுவோம்
தீமையை ஒழிப்போம்
நல்வழி நடப்போம்
இயேசுவின் பின்செல்வோம்!

2. பகையை ஒழிப்போம்
பாசத்தை வளர்ப்போம்
இயேசுவை புகழ்ந்திடுவோம்
நல்லதை நினைப்போம்
நன்மையே செய்வோம்
நன்றி கூறிடுவோம்!

3. ஆவியில் ஜெபிப்போம்
அபிஷேகம் பெறுவோம்
இயேசுவை துதித்திடுவோம்
சாட்சியாய் வாழ்வோம்
முத்திரை பதிப்போம்
மகிமையில் நுழைந்திடுவோம்

# 39. இயேசுவின் அன்பு இதயத்திலே

இயேசுவின் அன்பு இதயத்திலே
இன்பம் காண்கின்றேன்
இயேசு நல்லவர் என்று நான்
சுவைத்து மகிழ்கின்றேன்
துதித்திடுவேன் ஆராதிப்பேன்
வாழ்த்துகிறேன் தோத்திரமே

1. அன்பு என்பது தெரியாதிருந்தேன்
ஆசைகள் என்னும் பிடியில் இருந்தேன்
இனம் மொழி வெறியில் நான் இருந்தேன்
அன்பர் இயேசு மீட்டுவிட்டார்

2. அலைந்து திரிந்தேன் பாவ உலகில்
அணைத்துக் கொண்டார் தன்மகனாய்
இயேசுவின் அன்பைப் பருகிடுவேன்
பரிந்து தினமும் ஜெபித்திடுவேன்

3. உறவுகளை நான் மதித்தது இல்லை
குடும்பத்தில் பகையை நான் வளர்த்தேன்
எளியவர் பலரை நான் வெறுத்தேன்
இயேசு என்னை அணைத்துக் கொண்டார்

4. முன்பு இருந்தேன் நான் முள்செடியாய்
நேற்று வாழ்ந்தேன் கல்மனமாய்
முற்றும் உணர்ந்தவர் அழைத்ததினால்
என்றும் அவரில் கனிகொடுப்பேன்.

## 40. இயேசுவே ஆண்டவர்

இயேசுவே ஆண்டவர்
அற்புதம் செய்வார்
எனக்கு வெற்றித் தருவார்
தேவாதி தேவனுக்கு மகிமை
ராஜாதி ராஜனுக்கு மகிமை - 2

1. என்னென்ன வேதனை வந்தாலும்
ஒடுங்கி நான் ஒழிவதில்லை - 2
கர்த்தர் என்னைக் காத்திடுவார்
கரங்கள் நீட்டி தூக்கிடுவார் - 2

2. பகைவர்கள் என்னை எதிர்த்தாலும்
கர்த்தர் நாமம் எனக்கு உண்டு - 2
தேவ வார்த்தை வாளேந்தியே
எதிரியை திடமாய் வென்றிடுவேன் - 2

3. பாசான் நாட்டு எருமைகள் போல்
பரிகாச சொற்கள் வந்தாலும் - 2
உண்மை உள்ளவர் தாங்கிடுவார்
உறுதியாய் என்னை நடத்திடுவார்

4. எப்போதும் மகிழ்ந்து துதித்திடுவேன்
இயேசுவின் நாமம் உயர்த்திடுவேன்
ஆவியிலே தினம் ஜெபித்திடுவேன்
அனைத்திற்கும் நன்றி கூறிடுவேன்.

## 41. இயேசையா உம்மை நம்புகிறேன்

இயேசைய்யா உம்மை நம்புகிறேன்
இயேசைய்யா உம்மை நேசிக்கிறேன்
யாரை விட்டுப் பிரிந்தாலும்

நஷ்டம் இல்லையே ராஜா
உம்மை விட்டுப் பிரிந்தாலோ
ஜீவன் இல்லையே!

1. உலகம் என்னை வெறுத்தாலும்
கவலை இல்லையே
உன்னை நான் மறந்துவிட்டால்
உயர்வு இல்லையே!

2. பொய் நாவு பழித்தாலும்
பயங்கள் இல்லையே
பரலோக வார்த்தை என்னை
உறுதிப்படுத்துமே!

3. குறைகள் சொல்லி பகைத்தாலும்
துயரம் இல்லையே
மகிமையான சிலுவைகொண்டு
வெற்றிக் கொள்ளுவேன்!

4. தீமையான செய்தியினால்
கலக்கம் இல்லையே
உன்னதரின் அடைக்கலத்தில்
துதித்து மகிழுவேன்!

## 42. இயேசுவின் அன்பு

இயேசுவின் அன்பு நம்மை நிரப்பும்
இயேசுவின் ஆவி வல்லமைத் தரும்!
வேண்டுவாய் ஜெபிப்பாய் என்மகனே!
வேண்டுவாய் துதிப்பாய் என்மகனே!

1. ஓரடி எடுத்து வந்திடுவாய்
ஓடி வந்து உன்னைத் தழுவிக்கொள்வார்
அவரோடு உன்னை சேர்த்துக்கொள்வார்
காலமெல்லாம் அவர் கைகொடுப்பார்

2. கண்ணீர் எல்லாம் துடைத்திடுவார்
கவலைகள் எல்லாம் போக்கிடுவார்
வேதனைகளிலே பங்கு கொள்வார்
பாரங்கள் எல்லாம் சுமந்து கொள்வார்

3. தனிமையில் வாடி தவிக்கும்போது
தாயாக வந்து அணைத்துகொள்வார்
நெஞ்சோடு நெஞ்சாகப் பேசிடுவார்
புண்களை எல்லாம் ஆற்றிடுவார்!

4. வலுவற்ற நிலையில் பெலன் தருவார்
ஆவியார் உனக்குத் துணைவருவார்
இரக்கத்தால் உன்னை சூழ்கூடிப்பார்
பரிவாக உன்னை நடத்திச்செல்வார்!

## 43. இயேசுவே நீர் ஒருவரே ப

இயேசுவே நீர் ஒருவரே பரிசுத்தர்
இயேசுவே நீர் ஒருவரே உத்தமர்
இயேசுவே நீர் ஒருவரே வல்லவர்
இயேசுவே நீர் ஒருவரே நல்லவர்
அல்லேலூயா - 4

1. இயேசுவே ஆண்டவர் என தேர்ந்தெடுத்தேன்
இயேசுவே வாழ்வு என்று முடிவெடுத்தேன் - 2
முதலும் முடிவும் அவரே என உறுதிக் கொண்டேன் -2
முடிவில்லா வாழ்வில் என்னை இணைத்துக் கொண்டேன்

2. முடிவில்லா அன்பினாலே தேர்ந்தெடுத்தார்
முத்திரையாய் ஆவியை எனக்குத் தந்தார் - 2
பாவத்திலே வாழ்ந்து வரும் மாந்தர்தனை - 2
பரிசுத்தமாக்கிட என்னை அபிஷேகித்தார்

3. எளியவருக்கு சுபச்செய்தி சொல்லிடவே
பாவி எந்தன் உதட்டினையே சுட்டெரித்தார் - 2
பட்டம் பதவி யாவையும் நான் உதறிவிட்டேன் - 2
பரன் இயேசு வழிநடத்த வந்து விட்டேன்

4. இயேசுவே ஆண்டவர் என்று விசுவசிப்போம்
நாவினாலே அறிக்கையிட்டு மீட்படைவோம் - 2
இயேசுவே ஆண்டவரென புகழ்ந்திடுவோம் - 2
இயேசுவே மீட்பர் என்று வாழ்ந்திடுவோம்

## 44. இயேசுவே மகா பரிசுத்த நேசரே

இயேசுவே மகா பரிசுத்த நேசரே - 2
மாட்சிமையும் மகிமையும் - 2
ஆராதனையும் துதிகளும் - 2
என்றென்றும் உமக்கே ஸ்தோத்திரமே

1. பரிவாய் என்னைக் காண்கிறார் - 2
பாசமாய் என்னை அழைக்கின்றார் - 2
பக்தர்கள் நெஞ்சில் இருக்கின்றார் - 2
ஒரு கோடி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

2. சிலுவை இரத்தம் சிந்தினீரே
நேசர் எங்கள் இரட்சகரே
ஜீவத் தண்ணீர் ஊற்றுமே
ஒரு கோடி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

3. வேதனை எல்லாம் போக்கிடுவாய்
விரைவாய் என்னைத் தூக்கிடுவாய்
மகிழ்ந்து நன்றி பாடிடுவேன்
ஒரு கோடி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

4. உணவாய் உம்மைத் தருகின்றாய்
உயிராய் என்னில் வாழ்கின்றாய்
உமக்காய் நானும் வாழ்ந்திடுவேன்
ஒரு கோடி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

## 45. இயேசுவே எனக்குக் கேடயமே

இயேசுவே எனக்குக் கேடயமே
என்னைக் காப்பவர் அவரே
இயேசுவே எனக்கு நம்பிக்கையே
என்னை சுமப்பவர் அவரே!
ஜெபமே என்றும் ஜெபமே! (2)
ஜெயம் ஜெயம் ஜெயமே ஜெபமே! (2)

1. சீயோன் மலையே
   காவல் கோபுரமே
   துள்ளி எழுந்திடுவாய்
   வெற்றி பெற்றிடுவாய்!

2. பூரண அழகே
   ஆவியார் முத்திரையே
   சத்திய வார்த்தையினால்
   சத்துருவை துரத்திடுவாய்!

3. தேவ பிள்ளையே
   செம்மறியின் மணமகளே
   எழுந்து சுடர்விடுவாய்
   சான்று பகர்ந்திடுவாய்!

4. ஆவியார் தங்கும்
   பரிசுத்த ஆலயமே
   தினமும் ஜெபித்திடுவாய்
   மகிமை பெற்றிடுவாய்

## 46. இயேசுவே தாவீதின் மகனே

இயேசுவே தாவீதின் மகனே
என்மீது மனமிரங்கும் - அய்யா
என்மீது மனமிரங்கும்

1. மனத்தின் தீமைகளை தயவாய் நீக்கிவிடும்
மனத்தின் கீறல்களை முற்றும் ஆற்றிவிடும்!
2. இதயத்தின் வெறுப்புகளை தயவாய் நீக்கிவிடும்
இதயத்தின் இன்னல்களை முற்றும் ஆற்றிவிடும்!
3. தூய்மையின் உள்ளத்தையே தயவாய் தந்தருளும்
தூய்மையின் ஆவிதனை என்னுள் மலரச்செய்யும்

## 47. இணையற்றத் துணையாளரே

இணையற்றத் துணையாளரே
தூயநல் ஆவியாரே!
எம்மேல் இரங்கிடுமே
எம்மை நிரப்பிடுமே

1. தனிமையைபோக்கி தாயாக வந்து
தாகத்தைத் தீர்ப்பவரே
ரசமாகவந்து இனிமையைத்தந்து
அதிசயம் செய்பவரே! - 2
அபிஷேக முத்திரையே
ஆறுதல் தருபவரே - 2
எம்மேல் இரங்கிடுமே எம்மை நிரப்பிடுமே - 2

2. ஞானத்தைத்தந்து உண்மையை சொல்லி
நெஞ்சத்தில் வாழ்பவரே
நெருப்பாகவந்து பாவத்தைநீத்து
நல்வழி நடத்துவீரே! - 2
மகிமையின் நம்பிக்கையே
நிரந்தர நிம்மதியே - 2
எம்மேல் இரங்கிடுமே
எம்மை நிரப்பிடுமே! - 2

3. பேய்களைஓட்டி பகைமையைநீக்கி
வல்லமை பொழிபவரே
பனிமழைபெய்து பாசமாய்வந்து
பரவசம் ஆக்குவீரே - 2
கல்மனம் கரைப்பவரே
கருணைக் காட்டுவீரே - 2
எம்மேல் இரங்கிடுமே
எம்மை நிரப்பிடுமே - 2

## 48. உன் பாதம் சேரவேண்டுமே

உன்பாதம் சேரவேண்டுமே - எனக்கு
உன்பாதம் சேரவேண்டுமே!
உன் முகத்தைக் காணவே
உன் புகழைப் பாடவே
உன் பாதம் சேரவேண்டுமே! ஐயா
உன் பாதம் சேரவேண்டுமே!

1. பாவி என்னை மீட்கவே
பாவத்தையே போக்கவே
பாசத்தோடு பார்க்கவேண்டுமே - என்னை
பரிவோடு உயர்த்தவேண்டுமே! ஐயா
பரிவோடு உயர்த்தவேண்டுமே

2. இணையில்லா செல்வமே
என்நேச கர்த்தரே
என்னோடு வருவாயப்பா - எனக்கு
ஆறுதல் தருவாயப்பா! எனக்கு
ஆறுதல் தருவாயப்பா!

3. கண்ணீரால் நனைத்து
உம்பாதம் விழுந்தேன்
என்துயரம் தாங்குமப்பா - எனக்கு
வல்லமை தாருமப்பா - (2)

## 49. உன்னதத்தின் வல்லமையே

உன்னதத்தின் வல்லமையே பரிசுத்த ஆவியே! -2
இறங்கி வாரும் விரைந்து வாரும்
அபிஷேகம் தாரும் ஆட்கொண்டு எம்மை நிரப்பும்! -2

1. தண்ணீர் மீது ஆற்றலுடனே
அசைந்து அசைந்து எழுந்தவரே
என் உள்ளத்தில் ஊற்றாய் உயிராய்
பொங்கிப் பொங்கி எழுவீரே!
அதிசயம் செய்வீரய்யா
ஆறுதல் தருவீரய்யா!

2. எலும்பைப் பிளந்து சாம்சோன் தமக்கு
ஊற்றாய் தாகம் தீர்த்தவரே
உலர்ந்த எலும்புகள் ஊழியர் எமக்கு
வல்லமையைத் தருவீரே!
அதிசயம் செய்வீரய்யா
ஆறுதல் தருவீரய்யா!

3. எலியா கொடுத்த காணிக்கையெல்லாம்
நெருப்புப் பிழம்பாய் எரித்தீரே
எந்தன் உடம்பின் பாவமெல்லாம்
தீயால் சுடுவீரே!
அதிசயம் செய்வீரய்யா
ஆறுதல் தருவீரய்யா!

4. மரியாள்மீது ஆற்றலுடனே
மேகமாய் நிழலாய் இறங்கினீரே!
அடியவர் எமக்கும் அன்பாய் கனிவாய்
இன்றும் என்றும் வருவீரே
அதிசயம் செய்வீரய்யா
ஆறுதல் தருவீரய்யா!

5. வெறுப்பு கசப்பு அனைத்தையும் கரைத்து
அன்பு பொறுமையால் நிரப்புவீரே!
பேய்கள் பகைமை எல்லாம் ஒழித்து
சமாதானம் அருள்வீரே!
அதிசயம் செய்வீரய்யா
ஆறுதல் தருவீரய்யா!

## 50. உம்மையே நினைக்கணுமே

உம்மையே நினைக்கணுமே,
உமக்காய் உருகணுமே!
உம்மைத் தவிர ஒன்றுமில்லையே - எனக்கு
ஒன்றுமில்லையே! (2)

1. வாழ்வதும் உமக்கே
சாவதும் உமக்கே
தாழ்விலும் உயர்விலும்
எல்லாமே நீரே அய்யா!
நேசரே இயேசுவே!
வல்லமைத் தாரும் அய்யா! (2)

2. துன்பத்தின் பிடியில்
பாடுகள் நடுவில்
உடைந்து போவதில்லை
நம்பிக்கை இழப்பதில்லை!

3. தூய்மையின் ஜெபத்தில்
அன்புடன் பணியில்
இணைந்து வாழணுமே
உம்மோடு நிலைக்கணுமே!

# 51. உம்மைத் துதிப்பேன்

உம்மைத் துதிப்பேன் உம்மைத் துதிப்பேன்
இயேசுவே ஆண்டவரே உம்மைத் துதிப்பேன் - 2

1. பிதாவின் மகனே உம்மைத் துதிப்பேன்
இஸ்ரவேலின் மாட்சிமையே உம்மைத் துதிப்பேன்
நீதியின் சூரியனே உம்மைத் துதிப்பேன்
உலகின் ஒளியே உம்மைத் துதிப்பேன்

2. தேர்ந்தெடுத்த இயேசுவே உம்மைத் துதிப்பேன்
நீதிமானின் தந்தையே உம்மைத் துதிப்பேன்
நசரேத்தூர் இயேசுவே உம்மைத் துதிப்பேன்
நற்கருணை நாதரே உம்மைத் துதிப்பேன்

3. கடவுளின் தூய்மையே உம்மைத் துதிப்பேன்
கடவுளின் ஞானமே உம்மைத் துதிப்பேன்
கடவுளின் செம்மறியே உம்மைத் துதிப்பேன்
கடவுளின் கொடையே உம்மைத் துதிப்பேன்

4. அறுவடை ஆண்டவரே உம்மைத் துதிப்பேன்
அபிஷேகம் செய்பவரே உம்மைத் துதிப்பேன்
ஆவியை பொழிபவரே உம்மைத் துதிப்பேன்
ஆற்றலாய் உள்ளவரே உம்மைத் துதிப்பேன்

5. உயிரின் வார்த்தையே உம்மைத் துதிப்பேன்
உணவாய் வந்தவரே உம்மைத் துதிப்பேன்
வாழ்வோரின் கடவுளே உம்மைத் துதிப்பேன்
வானகம் தந்தவரே உம்மைத் துதிப்பேன்

6. தாவீதின் மகனே உம்மைத் துதிப்பேன்
தாய் மரியின் சரீரமே உம்மைத் துதிப்பேன்
தாவீதின் திறவுகோலே உம்மைத் துதிப்பேன்
தாழ்ச்சியின் சிகரமே உம்மைத் துதிப்பேன்

7. அதிசயம் செய்பவரே உம்மைத் துதிப்பேன்
அற்புதமானவரே உம்மைத் துதிப்பேன்
அணைப்பவரே நான் உம்மைத் துதிப்பேன்
அன்பைத் தந்தவரே உம்மைத் துதிப்பேன்

## 52. உம்மை நினைத்து நினைத்து

உம்மை நினைத்து நினைத்து மகிழ்கின்றேன்
நன்றி சொல்லி சொல்லி துதிக்கின்றேன்
ஆண்டவரே உம்மை துதிக்கின்றேன்!

1. மாண்புடன் உம்மையே வாழ்த்திடுவேன்
உம்திரு தலத்தில் நுழைந்திடுவேன்
உம்திரு செயல்களை நினைத்திடுவேன்
உம்திரு நாமத்தை உயர்த்திடுவேன்!

2. எக்காளத் தொனிகள் முழங்கிடுவேன்
வீணையும் யாழும் இசைத்திடுவேன்
உமது இரக்கத்தை நினைத்திடுவேன்
உம் திருநாமத்தை உயர்த்திடுவேன்!

3. வாழ்நாள் முழுதும் புகழ்ந்திடுவேன்
உயிருள்ள வரையில் நினைத்திடுவேன்
உம்மீது நம்பிக்கை வைத்திடுவேன்
உம்திரு நாமத்தை உயர்த்திடுவேன்!

## 53. என் உடலும் என் உள்ளமும்

என் உடலும் என் உள்ளமும்
இன்றும் என்றும் உமக்கே சொந்தம்
தேவனே உமக்கே சொந்தம் - எங்கள்
இராஜனே உமக்கே சொந்தம்!

1. விண்ணையும் மண்ணையும் படைத்தவரே
மகிமையும் மாட்சியும் நிறைந்தவரே
மண்ணில் இன்று வாழ்பவரே - அப்பா
என்னை என்றும் காப்பவரே!

2. பரிசுத்த இரத்தம் தெளித்தவரே
இதயத்தை எனக்காய் திறந்தவரே
பாவி என்னை அழைத்தவரே - அப்பா
என்னை என்றும் காப்பவரே!

3. வியாதிகள் தொல்லைகள் தீர்ப்பவரே
வல்லமை எல்லாம் கொண்டவரே
தாசன் என்னை அணைப்பவரே - அப்பா
என்னை என்றும் காப்பவரே

## 54. என் இயேசுவே என் இயேசுவே

என் இயேசுவே என் இயேசுவே
உம்மை நான் காண வேண்டும்!
என் இயேசுவே என் இயேசுவே
உம் அருகில் வாழ வேண்டும்!

என் தாகம் தீரும் அப்பா
என் ஏக்கம் போக்கும் அப்பா! -2

1. கிறிஸ்துவே எனக்கு ஜீவியம் ஆனார்
கிறிஸ்துவே எனக்கு வாழ்வும் ஆனார்! -2
எதற்கும் நான் அஞ்சமாட்டேன்
எதற்கும் நான் கலங்கமாட்டேன்! -2

2. கிறிஸ்துவே எனக்கு உண்மையும் ஆனார்
கிறிஸ்துவே எனக்கு உயிரும் ஆனார்! -2
எதற்கும் நான் அஞ்சமாட்டேன்
எதற்கும் நான் கலங்கமாட்டேன்! -2

3. கிறிஸ்துவே எனக்கு கேடயம் ஆனார்
கிறிஸ்துவே எனக்கு பெலமும் ஆனார்! -2
எதற்கும் நான் அஞ்சமாட்டேன்
எதற்கும் நான் கலங்கமாட்டேன்! -2

4. கிறிஸ்துவே எனக்கு துணையும் ஆனார்
கிறிஸ்துவே எனக்கு தஞ்சமும் ஆனார்! -2
எதற்கும் நான் அஞ்சமாட்டேன்
எதற்கும் நான் கலங்கமாட்டேன்! -2

5. கிறிஸ்துவே எனக்கு பாதையும் ஆனார்
கிறிஸ்துவே எனக்கு ஒளியும் ஆனார்! -2
எதற்கும் நான் அஞ்சமாட்டேன்
எதற்கும் நான் கலங்கமாட்டேன்! -2

## 55. என் உயிரே இயேசையா!

என் உயிரே இயேசையா
உமக்காக ஏங்குதய்யா - என் மனம்
உமக்காக ஏங்குதய்யா!

1. கடவுளின் வலத்தில் அமர்ந்தவரே
என்னையும் உம்முடன் அமர்த்துவீரே
உம் அருகில் அமர்த்துவீரே - என்னை
அமர்த்துவீரே!

2. மகிமையின் மேகத்தில் வருவீரே
என்னையும் எடுத்து உயர்த்துவீரே
வல்லமையில் உயர்த்துவீரே - என்னை
உயர்த்துவீரே!

3. மாசற்ற இதயம் திறந்தவரே
என்னையும் அதனுள் மறைத்தவரே
உம் அன்பில் நிரப்புவீரே - என்னை
நிரப்புவீரே!

4. தெய்வச் சாயலை துறந்தவரே
அடிமையின் ரூபம் எடுத்தவரே
உம் தோளில் சுமப்பவரே - என்னை
சுமப்பவரே!

5. உடலை உணவாய் தந்தவரே
ஆவியை உயிராய் பொழிந்தவரே
அதன் வழியில் நடத்துவீரே - என்னை
நடத்துவீரே!

## 56. என் ஆன்மா இறைவனையே

என் ஆன்மா இறைவனையே
எத்திப் போற்றியே மகிழ்கின்றது
மீட்பராம் கடவுளை நினைக்கின்றது - என்

1. தாழ்நிலை இருந்த தம் அடியவரை
தயவுடன் கண்கள் நோக்கினார்
இந்நாள் முதலாம் தலைமுறைகள்
எனைப் பேறுடையாள் என்றிடுமே - என்

2. எனெனில் வல்லமை மிகுந்தவரே
எனக்கரும் செயல்பல புரிந்துள்ளார்
அவர்தம் பெயரும் புனிதமாகும்
அவரில் அருள்மோர்க்கிரக்கமாகும் - என்

## 57. என் தெய்வம் இயேசு

என்தெய்வம் இயேசு
என்னோடு இருக்க
பயப்படவே மாட்டேன் - நான்
பயப்படவே மாட்டேன்!

1. அலைகள் எழும்பட்டும்
கடலும் பொங்கட்டும்
கர்த்தர் என்னைக்காத்திடுவார்
கரங்கள் நீட்டி தூக்கிடுவார்

2. வேதனை நெருக்கட்டும்
பசிபகை தாக்கட்டும்
வல்லவர் இயேசு வந்திடுவார்
தோள்மேல் என்னை சுமந்திடுவார்!

3. நோய்களில் துடித்தாலும்
பேய்த்தொல்லை கொடுத்தாலும்
இயேசுவே என்னை மீட்டிடுவார்
வல்லமை எனக்குப் பொழிந்திடுவார்!

4. பலர் என்னை பழிக்கட்டும்
ஓரமாய் ஒதுக்கட்டும்
இரட்சகர் என்னை பார்த்திடுவார்
புதுமைகள் எனக்கு செய்திடுவார்!

## 58. என் இயேசு ராஜா

என் இயேசு ராஜா
என் நேசர் நீர்தான் ஐயா
என்னை நீர் தேடி வந்தீர் -
உன் பாதம் சரண் அடைந்தேன் - நான்
உன் பாதம் சரண் அடைந்தேன்

1. உம்மை நான் பார்க்கின்றேன் - நான்
மகிழ்ச்சி அடைந்தேன் ஐயா

2. வாழ்வின்றி நான் அலைந்தேன் - ஐயா
என் வாழ்வின் துணை ஆனீரே

3. துயரத்தால் கலங்கி நின்றேன் - எனக்கு
ஆறுதல் அளித்தீர் ஐயா
4. பாவத்தினால் பெலன் இழந்தேன் - இந்த
அடிமையை சுமந்தீர் ஐயா
5. மேகங்களில் வருவீரே - என்னை
அழைத்துச் செல்வீரே

## 59. என் இயேசுவே என் மீட்பரே

என் இயேசுவே என் மீட்பரே
என் ஜீவனே என் தஞ்சமே!
ராபூணி உம்மை நான் காணவேண்டும்
உமக்காக வாழவேண்டும் (2)

1. என்றும்உம் திருநாமம் அதிசயமே
என்றும் உம்திருசமூகம் துணைவருமே
ராபூணி உம்மைநான் காணவேண்டும்
உமக்காக வாழவேண்டும்! (2)
2. உந்தன் பெரும்கருணையும் கிருபையுமே
ஏழை எந்தன் கண்ணீரை போக்கிடுமே!
ராபூணி உம்மைநான் காணவேண்டும்
உமக்காக வாழவேண்டும்! (2)
3. அமர்ந்தாலும் எழுந்தாலும் உந்தன்கரங்கள்
தாசன் என்னை என்றுமே தாங்கிடுமே!
ராபூணி உம்மைநான் காணவேண்டும்
உமக்காக வாழவேண்டும்! (2)
4. உந்தன் திரு வார்த்தையும் வசனமும்
பாவி எந்தன் நோய்களை தீர்த்திடுமே!
ராபூணி உம்மைநான் காணவேண்டும்
உமக்காக வாழவேண்டும்! (2)

## 60. என் துன்பம் சுமந்தவரே

என் துன்பம் சுமந்தவரே சிலுவை வடிவினிலே
உம் காயங்களினால் குணமாவேனே
குறை நீங்கி குணமடைவேனே இயேசய்யா
மனம் மாறி சுகம் பெறுவேன். (2)

1. கரம் நீட்டி என்னை அழைத்து
என்னோடு பேசுவீரே
என்னை தேற்றுவீரே (2)
இயேசய்யா இயேசய்யா (2)

**என் துன்பம்...**

2. மனமிரங்கி என்னைப்பாரும்
என்நோயை நீக்கி விடும்
என் பிணியை தாங்கிக் கொள்ளும் (2)
இயேசய்யா இயேசய்யா (2)

**என் துன்பம்...**

3. தயை கூர்ந்து செவிசாய்த்து
என்குரலை கேளும் அய்யா
என்கவலை தீரும் அய்யா (2)
இயேசய்யா இயேசய்யா (2)

**என் துன்பம்...**

## 61. என் ஜீவன் என்பது கிறீஸ்துவே

என் ஜீவன் என்பது கிறீஸ்துவே
என் வாழ்வு என்பது கிறீஸ்துவே - 2
கர்த்தருக்கு அஞ்சி நடப்பேன்
அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவேன்-2
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே! (2)

1. என்ன நேர்ந்தாலும் எதுவந்தாலும்
துணிவை இழக்கமாட்டேன்
சோர்ந்து போகமாட்டேன் - நான்
சோர்ந்து போகமாட்டேன்!
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே... (2)

2. எவர் வெறுத்தாலும் எது சொன்னாலும்
இயேசுவை பார்த்திடுவேன்
சான்று பகர்ந்திடுவேன் - நான்
சான்று பகர்ந்திடுவேன்! ஸ்தோத்திரம்...

3. மலைகள் பெயர்ந்தாலும் புயல் எழுந்தாலும்
எதையும் தாங்கிக் கொள்வேன்
இயேசுவை சுமந்துக்கொள்வேன்-நான்
இயேசுவை சுமந்துக் கொள்வேன்! ஸ்தோத்திரம்..

## 62. என்னை நடத்தும்

ஹாகியோஸ் ஓ தேயோஸ்
(HAGIOS O THEOS)
ஹாகியோஸ் ஓ இஸ்கிறோஸ்
(HAGIOS O ISCHYROS)
ஹாகியோஸ் ஓ அத்தநாதோஸ்
(HAGIOS O ATHANATHOS)
ஏலேயிசோன் ஓ ஈமாஸ்
(ELEISON O HIMAS)
என்னை நடத்தும் தெய்வமே
உம்வழியில் என்னை நடத்தும்!

1. மேகத் தூணாய் நீர் நடந்தீரே
பாறையைப் பிளந்து தண்ணீர் தந்தீரே
தெய்வமே நானும் உம்பிள்ளையன்றோ
தயவாய் காண்பீரே
என்தாகம் தணிப்பீரே!

2. பாலைவெளியில் நீர் வருவீரோ
மன்னாவைப் பொழிந்து அருள்செய்வீரோ
உம் திருஉடலும் ரத்தமும் இன்று
உணவாய் தருவீரோ
என்தாகம் தணிப்பீரோ!

## 63. என்னை மீட்ட

என்னை மீட்ட உம்மை நினைத்து
நான் மகிழ்ச்சி அடைகின்றேன் - 2
உந்தன் நாமம் வாழ்கவே
உந்தன் அரசு வந்திடவே - 2

1. உம்சித்தம் எனக்கு அப்பம் ஐயா
அதுவே எனக்கு போதுமய்யா - 2
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! (2)

2. உம்கண்கள் என்னை பார்த்ததய்யா
ஆறுதல் எனக்கு தந்ததய்யா
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! (2)

3. கொடுமைகள் பலவே செய்தேனய்யா
மன்னிப்பு எனக்கு தந்தீரய்யா
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! (2)

4. உம் இரத்தம் எனக்கு ஜீவனய்யா
ஆவியை எனக்கு பொழிவதய்யா
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! (2)

## 64. எனது ஜெபத்தைக் கேளும்

எனது ஜெபத்தைக் கேளும் கர்த்தாவே
எனது பிணிகள் தீரும் கர்த்தாவே

1. கடன் தொல்லையால் அப்பா நான்
கண்ணீர் வடிக்கிறேன்
உதவி செய்ய யாருமில்லையே
எல்லா பக்கமும் அப்பா நான்
நெருக்கப்படுகிறேன்
உதவி செய்ய ஓடிவாருமே

2. மனப்போராட்டம் அப்பா - நான்
சோர்ந்து போகிறேன்
உதவி செய்ய யாருமில்லையே
மனிதரெல்லாம் அப்பா - என்னை
வெறுத்து ஒதுக்கினர்
உதவி செய்ய ஓடிவாருமே

3. வியாதி துன்பங்கள் அப்பா -
என்னால் தாங்க முடியல
உதவி செய்ய யாருமில்லையே
சொந்த பந்தங்கள் அப்பா - எனக்கு
எதுவும் இல்லையே
உதவி செய்ய ஓடிவாருமே

4. வேலை வேண்டும் அப்பா - என்
தடைகள் நீக்கிட
உதவி செய்ய யாருமில்லையே
பேய்க்கட்டுகள் விலகி அப்பா
நெஞ்சு வலி தீர
உதவி செய்ய ஓடிவாருமே

5. குடல் புண்கள் ஆற அப்பா
கட்டிகள் கரைந்திட
உதவி செய்ய யாருமில்லையே
காது வலிகள் நீங்க அப்பா
பார்வை கிடைத்திட
உதவி செய்ய ஓடிவாருமே

6. காசநோய்கள் தீர அப்பா
உதிர போக்கு நிற்க
உதவி செய்ய ஓடிவாருமே
தலைவலிகள் நீங்க அப்பா
இதயம் சுகம் பெற
உதவி செய்ய ஓடிவாருமே

7. படர் நோய்கள் மறைய அப்பா
பாவ நோய் தீர்க்க
உதவி செய்ய யாருமில்லையே
தூய இரத்தம் பாய்ந்திட அப்பா
தூய உள்ளம் பெறவே
உதவி செய்ய ஓடி வாருமே

## 65. எழுந்திடு இஸ்ரவேலே

எழுந்திடு இஸ்ரவேலே எழுந்திடு!
தொழுதிடு இறைவனைத் தொழுதிடு (2)

1. அபிரகாமின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
தாவீதின் ஆண்டவரை தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

2. யாக்கோபின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
மோசேயின் ஆண்டவரை தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

3. இறைவாக்கின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
இதயத்திலே ஆண்டவரை தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

4. கன்னித்தாயின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
இரக்கத்தின் அரசரையே தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

5. புனிதர்களின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
அப்போஸ்தலர்களின் ஆண்டவரை தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

6. தூதர்களின் தேவனை தொழுதிடுவோம் வாரீர்!
துயர்துடைக்கும் ஆண்டவரை தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

7. உண்மையிலும் ஆவியிலும் தொழுதிடுவோம் வாரீர்!
திருச்சபையில் தினம் தினமே தொழுதிடுவோம் வாரீர்!
உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக! - 2

## 66. எந்த ஆட்சி வந்தாலும்

எந்த ஆட்சி வந்தாலும்
என்நெஞ்சில் இயேசுவின் ஆட்சியே
எந்நேரமும் என் நாவுந்தன் - திரு
நாமத்தையே துதித்திடுமே! - (2)
இயேசுவின் அரசு வந்திடுமே! என் (2)

1. பாவச் சேற்றில் வாழ்ந்த என்னை
அன்புடன் தூக்கி அணைப்பவரே
என் துன்ப காலத்தில் அரணும் கொடையுமாய்
ஆறுதல் எனக்குத் தருபவரே! (2)
இயேசுவே ஆண்டவர் என துதிப்போம் - நாம் (2)

2. ஆண்டவர் ஆவி என்மேலே
அவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார் நான்
அவரது அரசை எங்கும் சொல்லிட
அடியேன் என்னை அனுப்பியுள்ளார்! (2)
இயேசுவே ஆண்டவர் என துதிப்போம் - நாம்

3. பாவிகள் திருந்திட உழைப்பவர்கள்
பலரை நல்வழி நடத்தியவர் - என்றும்
விண்மீன் போலவே முடிவில்லா வாழ்வில்
பட்டொளி வீசி ஜொலிப்பார்கள் -
இயேசுவே ஆண்டவர் என துதிப்போம் - நாம்

4. தேவ வார்த்தை கிடைக்காமலே
மக்கள் கூட்டமாய் தவிக்கிறதே - நான்
ஏக்கத்தால் இன்று வருகிறேன் - அப்பா
தாகத்தை உடனே தீரும் ஐயா!
இயேசுவே ஆண்டவர் என துதிப்போம் - நாம்

5. உலகில் பாவம் மலிந்துள்ளதே
ஆண்டவர் கோபம் பெருகியதே - என்
ஆண்டவர் வருகை நெருங்கியது என்று
அனைவர்க்கும் விரைந்து சொல்லிடுவோம்
இயேசுவே ஆண்டவர் என துதிப்போம் - நாம்

## 67. எந்தன் வாழ்வில் இயேசு வந்தார்

எந்தன் வாழ்வில் இயேசு வந்தார்
எந்தன் பாதையை மாற்றிவிட்டார்
இந்த உலகினை வென்றிடவே
தம் ஆவியை எனக்களித்தார் - 2

1. இதுவே எனது சரீரம் என்றார்
   பணிவுடன் வாங்கி உண்டிடுவோம் - 2
   பரிசுத்தமாய் நாம் உண்ணும்போது - இதை - 2
   பரலோக வாழ்வை சுவைத்திடுவோம்
2. இதுவே எனது குருதி என்றார்
   பாசமுடன் வந்து பருகிடுவோம் - 2
   அன்புடன் இதை நாம் பருகும்போது - 2
   ஆவியின் வரங்களைப் பெற்றிடுவோம்
3. இயேசுவே எனக்கு வாழ்வு என்றால்
   மரணம் எனக்கு ஆதாயமே - 2
   உலக செல்வம் குப்பை என்று - இந்த - 2
   நாளும் உணர்ந்து வாழ்ந்திடுவோம்

## 68. எந்தன் உள்ளம் ஆர்ப்பரிக்குதே

ஏசைய்யா, ஏசைய்யா (2)
எந்தன் உள்ளம் ஆர்ப்பரிக்குதே (2)
ஆண்டவரே உம்பெயரை
அனுதினமும் சொல்லி
எந்தன் உள்ளம் ஆர்ப்பரிக்குதே! (2)

1. கடலைக் கட்டாந்தரையாய் ஆக்குவீரே
   ஆற்றையும் மதில்சுவராய் மாற்றுவீரே! (2)
   மலைப்புக்குரியது உம்செயல்கள்
   மேலானது உமது வல்லமையே! - 2
   (ஏசைய்யா...)
2. முடவர் துள்ளி நடக்க செய்(கு)வீரே
   ஊமையும் செவிடரும் பேசிமகிழ்வாரே
   அதிசயமானது உம் கிருபை
   உன்னதமானது உம் மகிமை! (2) (ஏசைய்யா...)

3. காயப்பட்ட ஊழியன் சுகம் பெறுவான்
கட்டப்பட்ட பாவியும் மீட்பு பெறுவான்
அதிசயமானது உம் கிருபை
உன்னதமானது உம் மகிமை! (2) (ஏசைய்யா___)

## 69. என் ஜனமே என் ஜனமே

என் ஜனமே என் ஜனமே
ஓடி வாருங்கள்
தாகம் தீர்த்திடுவேன்!
ஆவியைப் பொழிந்திடுவேன்!
என் மகனே! என் மகளே!
தனிமையில் தவித்தாயோ
களைத்துப் போனாயோ
ஆறுதல் தருவேன் வா!
அணைத்துக் கொள்வேன் வா!

1. பாழ்வெளியில் பாதை அமைப்போம்
பாலை நிலத்தில் ஆறுகள் ஓடச்செய்வோம்
பழிபாவங்கள் தீர்ந்திடவே
பரிசுத்தமாய் என்றும் வாழ்ந்திடுங்கள்!

2. கரம் பிடித்து நாம் நடத்திச்செல்வோம்
கட்டுண்ட கைகளை விடுதலை செய்திடுவோம்!
இருளில் வாழும் மக்களையே
ஜீவிய ஒளிக்கு அழைத்துச்செல்வோம்!

3. நாமே உன்னை மீட்டுக் கொண்டோம்!
நாமே உன்னை பெயரிட்டு அழைத்துக்கொண்டோம்
உன்மேல் மிகுந்த அன்பு கொண்டோம்
நாமே உன்னோடு நடந்து செல்வோம்

4. ஆண்டவர் நேரம் நெருங்கி உள்ளது
அவருக்கு என்றும் பிரியமாய் வாழ்ந்திடுங்கள்
என்றும் புகழ்ந்து ஜெபித்திடுங்கள்
தேவ ஆவியில் நிறைந்திடுங்கள்!

## 70. என்னை நேசிக்கும்

என்னை நேசிக்கும்
அன்பு தெய்வமே
உமக்கே ஆராதனை!

1. உலகம் உருவாகும் முன்னரே
என்னை அறிந்துக் கொண்டீர்!
உமக்கே ஆராதனை!

2. தரையில் கிடந்த என்னையே
தயவாய் உயர்த்திவிட்டீர்!
உமக்கே ஆராதனை!

3. பிள்ளைகள் ஆக்கும் ஆவியை
நிறைவாய் எனக்குத் தந்தீர் - உமக்கே.......

4. கதறிச் செபிக்கும் ஏழையை
நலன்களால் நிரப்பிவிட்டீர்! - உமக்கே.......

5. தாகத்தால் தவித்து துடித்தேனே
ஜீவனை எனக்கு தந்தீர்! - உமக்கே.......

6. பசியால் மடிந்த என்னையே
வார்த்தையால் நிறைவு செய்தீர் - உமக்கே.......

7. ஆவியின் கனிகள் வரங்களாலே
அபிஷேகம் செய்தீர் அப்பா - உமக்கே.......

## 71. எப்போதும் மகிழ்ச்சியாய்

எப்போதும் மகிழ்ச்சியாய் இருந்திடுவோம்
என்றும் ஒன்றாய் ஜெபித்திடுவோம் - 2
ஷலோம் ஷலோம் ஷலோம் ஷலோம்
அனைத்திற்கும் நன்றி சொல்வோம்! -2

1. ஒருவரை ஒருவர் மன்னிப்போம்
ஒருவரை ஒருவர் அன்புசெய்வோம்
மன்னிப்போம் மன்னிப்போம்
அன்பு செய்திடுவோம்! (ஷலோம்..........)

2. இயேசுவே என்று துதித்திடுவோம்
ஆண்டவரே என்று பணிந்திடுவோம்
துதித்திடுவோம் துதித்திடுவோம்
அவரையே பணிந்திடுவோம்! (ஷலோம்..........)

3. இயேசுவின் முகத்தை பார்த்திடுவோம்
இயேசுவின் சாட்சியாய் வாழ்ந்திடுவோம்
பார்த்திடுவோம் பார்த்திடுவோம்
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்! (ஷலோம்..........)

## 72. எக்காளத் தொனியுடன்

எக்காளத் தொனியுடன் பாடிடுவேன்
இயேசுவின் நாமத்தையே புகழ்ந்திடுவேன் (2)
தாய் என்னை மறந்தாலும் சேய் என்னை வெறுத்தாலும்
மாறாத தேவன் கைவிடமாட்டார் (2)
கவலை இல்லை எனக்கு கண்ணீர் இல்லையே! (2)

1. அஞ்சாதே எதற்கும் அஞ்சாதே
கலங்காதே ஒருபோதும் கலங்காதே (2)
உன்னோடு நான் நடப்பேன் என்றாரே
உனக்கு வலிமை தருவேன் என்றாரே! (2)
கவலை இல்லை...

2. பகைக்காதே எவரையும் வெறுக்காதே
பாவ வலையில் சிக்கித் தவிக்காதே (2)
அன்போடு நான் வருவேன் என்றாரே
உனக்குக் கருணைக் காட்டுவேன் என்றாரே! (2)
கவலை இல்லை...

3. பார்க்காதே திரும்பிப் பார்க்காதே
கலப்பையில் கைவைத்துத் திரும்பாதே (2)
என்தோளில் நான் சுமப்பேன் என்றாரே
உனக்குச் செழுமைத்தருவேன் என்றாரே! (2)
கவலை இல்லை...

## 73. எங்கள் ஆண்டவரே

எங்கள் ஆண்டவரே தெய்வத் திருமகனே (1)
ஆராதனை ஆராதனை! அனுதினம் ஆராதனை! - 2
பரிசுத்தரே! பலவானே! பணிந்து தொழுதிடுவேன்
(துதித்திடுவேன்)

1. அனைத்தையும் படைத்தவரே
ஆட்சி செய்பவரே! ஆராதனை..........

2. மகிமை நிறைந்தவரே
மாட்சியில் வருபவரே! ஆராதனை..........

3. எம்மையே பார்ப்பவரே
இரக்கம் மிகுந்தவரே! ஆராதனை..........

4. என்றும் வாழ்பவரே
இதயத்தை திறந்தவரே! ஆராதனை..........

5. அதிசயம் செய்பவரே
ஆறுதல் தருபவரே! ஆராதனை..........

6. வல்லமை மிகுந்தவரே
உத்தமம் ஆனவரே! ஆராதனை..........

7. உயிரைத் தந்தவரே
உயிராய் இருப்பவரே! ஆராதனை..........

8. ஆவியைப் பொழிபவரே
அன்பாய் பார்ப்பவரே! ஆராதனை..........

## 74. என்றென்றும் அழியாத

என்றென்றும் அழியாத என் உயிரே
நிலையான எங்களின் நம்பிக்கையே
தந்தோம் காணிக்கையை
எம்மையே காணிக்கையாக!

1. அப்பங்களை உமக்கு தந்தோம்
உம் திருமகனின் உடலாக மாற்றிடுவாய் - 2
உடமைகள் உமக்கு தந்தோம்
எப்போதும் உரிமை ஆக்கிடுவாய் - 2
எல்லாம் சொந்தம் ஆக்கிடுவாய்
அப்பா பிதாவே ஏற்றிடுவாய்!

2. இரசத்தையுமே உமக்கு தந்தோம்
உம் திருமகனின் உயிராக மாற்றிடுவாய் - 2
உடலையே உமக்கு தந்தோம்
எப்போதும் பரிசுத்தம் ஆக்கிடுவாய் - 2
எல்லாம் சொந்தம் ஆக்கிடுவாய்
அப்பா பிதாவே ஏற்றிடுவாய்!

3. கரங்களையே உமக்கு தந்தோம்
உம் திருமகனின் கரமாக மாற்றிடுவாய் - 2
கலைகளை உமக்கு தந்தோம்
கனிவாய் எமைநீ ஏற்றிடுவாய் - 2
எல்லாம் சொந்தம் ஆக்கிடுவாய்
அப்பா பிதாவே ஏற்றிடுவாய்!

## 75. என்னை இப்போது தொடுவீரே

என்னை இப்போது தொடுவீரே
இயேசைய்யா - நான் குணம் அடைவேன்!
உடனே சுகம் பெறுவேன்!

1. சித்தம் என்று சொல்வீரய்யா
நோய்களெல்லாம் சுத்தம் ஆகுமே!
என்னை உற்று பார்ப்பீரய்யா
பாவமெல்லாம் முற்றும் நீங்குமே!
எங்களை காக்கும் இறைவன் ஐயா
என்றும் உலகின் தலைவன் ஐயா!

2. எழுந்திடு என்பீரய்யா
பிணங்களுமே குரல் கேட்குமே!
அமைதி என்பீரய்யா
கடல் அலையும் நின்று போகுமே! (எங்களை காக்கும்)

3. வா என்று அழைப்பீரய்யா
பயங்களெல்லாம் ஒழிந்திடுமே!
கரம் நீட்டிக் கொடுப்பீரய்யா
சோர்ந்திடாமல் நடந்திடுவேன் (எங்களை காக்கும்)

4. குற்றமெல்லாம் சுமந்தீரய்யா
காயமெல்லாம் குணம் ஆகுமே!
திருரத்தம் தெளிப்பீரய்யா
பேய்களெல்லாம் தூரம் போகுமே! (எங்களை காக்கும்)

5. கசையடிப் பட்டீரய்யா
கண்ணீரெல்லாம் காய்ந்திடுமே!
முள் முடி தரித்தீரய்யா
மோட்ச வாசல் திறந்திடுமே! (எங்களை காக்கும்)

## 76. ஏங்குகிறேன் அய்யா!

ஏங்குகிறேன் அய்யா
உம்மீது தாகம் கொண்டு! (2)
நீரின்றி தரிசுநிலம்போல
என் உடல் உமக்காய் வாடியது!
கைகூப்பி அழைத்தேன் அய்யா!
துணையாக வாரும் அய்யா!
ஏங்குகிறேன் அய்யா (2)

1. இரவெல்லாம் புலம்பிப்புலம்பி
காத்துக்கிடக்கின்றேன்!
பகலெல்லாம் அலைந்து திரிந்து
சோர்ந்து போகிறேன்!
உம் பாதம் விழுந்தேன் அய்யா
உம் முகம் காட்டும் அய்யா!

2. கலைமான்கள் நீரைத்தேடி
ஓடி தவிப்பதுபோல்
உலகெல்லாம் ஓடி உழைத்து
நலிந்து போகின்றேன்!
உம் பக்கம் வந்தேன் அய்யா
உம் அருள் தாரும் அய்யா!

## 77. ஒருபோதும் கைவிடேன்

ஒருபோதும் கைவிடேன்
ஒரு நாளும் விலகிடேன்!
உன்னோடு நான் நடப்பேன்
நீ செல்லும் வழியெல்லாம்!

1. நோயினிலே நீ படுத்தாலும்
நெருப்பினிலே நீ சிதைந்தாலும்
இன்னலுற்றவேளையில் செவிசாய்ப்பேன்
மன்றாடும் வேளையில் உதவி செய்வேன்!

2. தீப்பிழம்பில் நீ விழுந்தாலும்
கடல்மீது நீ நடந்தாலும்!
இன்னலுற்றவேளையில் செவிசாய்ப்பேன்
மன்றாடும் வேளையில் உதவி செய்வேன்!

3. தாழ்வுற்று நீ மடிந்தாலும்
துயருற்று நீ துவண்டாலும்!
இன்னலுற்றவேளையில் செவிசாய்ப்பேன்
மன்றாடும் வேளையில் உதவி செய்வேன்!

4. தனிமையிலே நீ தவித்தாலும்
தாய் தந்தை உன்னை மறந்தாலும்!
இன்னலுற்றவேளையில் செவிசாய்ப்பேன்
மன்றாடும் வேளையில் உதவி செய்வேன்!

## 78. ஓசான்னா ஓசான்னா

ஓசான்னா ஓசான்னா - 2
ஓசான்னா பாடிடுவோம்
உன்னத தேவனுக்கே
கரம் தட்டி ஆர்ப்பரிப்போம்
கர்த்தரையே புகழ்ந்திடுவோம்! - 2

1. கடவுளின் இல்லம் நம்மிடையே
அவரே நம்மில் குடிகொள்வார்! - 2
புலம்பலில்லை அழுகையில்லை
கண்ணீரெல்லாம் துடைத்திடுவார்! - 2

2. ஜீவிய ஊற்றைத் திறந்திடுவார்
தாகமாய் வந்து பருகிடுவோம்! - 2
நோவு இல்லை சாவு இல்லை
விண்ணுக்கு நம்மை உயர்த்திடுவார் - 2

3. உன்னத வல்லமை பெற்றிடுவோம்
வஞ்சகப் பேயை வென்றிடுவோம்
துயரமில்லை துன்பமில்லை
மகிமையின் மேகத்தில் நுழைந்திடுவோம்!! - 2

## 79. ஒரு வார்த்தை சொல்லும்

ஒரு வார்த்தை சொல்லும் இயேசுநாதா
ஊழியன் நான் குணம்பெறுவேன்!
உம் இரத்தத்தால் கழுவும் அப்பா
என்னைக் கழுவும் அப்பா!

1. உலக ஆசையில் மூழ்கினேன்
உள்மன வேதனை அடைந்தேனே!
உத்தமர் உம்மையே மறந்தேனே
உம் தயவால் என்னை இரட்சிப்பீரே

2. வசைமொழி கேட்டு வாடினேன்
வஞ்சகர் வலையில் வீழ்ந்தேனே!
பரிசுத்தர் உம்மையே மறந்தேனே
பரிசுத்த ஆவியைப் பொழிவீரே!

3. பெருமையும் மோகமும் கொண்டேனே
பொய்கள் பலவே சொன்னேனே!
தூயவர் உம்மையே மறந்தேனே
தூய்மையின் ஆடையைத் தருவீரே!

4. பலரை நாவால் வதைத்தேனே
மன்னிப்புத் தரவே மறுத்தேனே
வள்ளலே என்னை மன்னிப்பீரே
வல்லமை எனக்குப் பொழிவீரே!

## 80. ஓசான்னா தேவனுக்கே

ஓசான்னா தேவனுக்கே ஓசான்னா தேவனுக்கே!
மகிமையின் கூடாரமே
மாசற்ற செம்மறியே
கல்வாரித் திருமகனே
ஆராதனை செய்கிறோம்!
ஓசான்னா தேவனுக்கே ஓசான்னா தேவனுக்கே!

1. விண்ணிலும் மண்ணிலும் ஆராதனை
தூதர்கள் மத்தியில் ஆராதனை
படைப்பவர் பார்ப்பவர் ஆராதனை
பரிசுத்தர் தூயவர் ஆராதனை

2. உண்மையில் ஆவியில் ஆராதனை
உள்ளத்தின் ஆழத்தில் ஆராதனை
வாழ்பவர் வருபவர் ஆராதனை
வல்லவர் நல்லவர் ஆராதனை

3. இரக்கத்தின் ஆண்டவர் ஆராதனை
இதயத்தில் வாழ்பவர் ஆராதனை
காண்பவர் கேட்பவர் ஆராதனை
கருணையின் கர்த்தரே ஆராதனை

4. பாரததேசத்தில் ஆராதனை
பக்தர்கள் மத்தியில் ஆராதனை
படைப்பவர் பார்ப்பவர் ஆராதனை
பரிசுத்தர் தூயவர் ஆராதனை

## 81. ஓசான்னா பாடிடுவோம்

ஓசான்னா பாடிடுவோம்
தேவனைப் புகழ்ந்திடுவோம்
ஓசான்னா (4)

1. காலையிலும் மாலையிலும்
கர்த்தரையே துதித்திடுவோம்
மகிமை மாட்சிமை
என்றுமே உமக்கே!

2. பரிசுத்தமாய் வாழ்ந்திடுவோம்
படைத்தவரை வாழ்த்திடுவோம்

3. அல்லேலூயா பாடிடுவோம்
ஆண்டவரைப் போற்றிடுவோம்

4. இன்பத்திலும் துன்பத்திலும்
இரட்சகரை புகழ்ந்திடுவோம்!

5. தீமையை விலக்கிடுவோம்
தூய்மையை அணிந்திடுவோம்!

6. கரங்களை உயர்த்திடுவோம்
கண்ணீரோடு ஜெபித்திடுவோம்!

7. இயேசுவையே பார்த்திடுவோம்
அவர் நாமம் உயர்த்திடுவோம்!

8. ஆவியிலும் உண்மையிலும்
ஆண்டவரைத் தொழுதிடுவோம்!

## 82. கல்வாரி பாதையிலே

கல்வாரி பாதையிலே
கர்த்தரைக் காணச்சென்றேன்
அவரின் முகத்தை நானும் கண்டேன்

என்னென்று நன்றி சொல்வேன்!
ஆனந்தமே ஆனந்தமே
அன்பரைக் கண்டுகொண்டேன் - 2

1. உன்பக்கம் நானும் நிற்பேன்
உமக்குத் தோள் கொடுப்பேன்
உம்நல்ல இதயம் எனக்குவேண்டும்
வல்லமை தாரும் நாதா! (ஆனந்தமே..........)

2. உம்பின்னே நான் நடப்பேன்
உம்முகம் நான் துடைப்பேன்
உமது மகிமை நானும்காண
கிருபை செய்யும் நாதா! (ஆனந்தமே..........)

3. சுயத்தை நான் வெறுத்தேன்
சிலுவை நான் சுமப்பேன்
உம்மையே நானும் ஆதாயமாக்க
இன்முகம் காட்டும் நாதா!

4. உம்மையே பற்றிக்கொண்டேன்
உலகை நான் மறந்தேன்
உம் நாமம் பாடி
சாட்சியாய் வாழ
(வல்லமை தாரும் நாதா!)
துணை செய்யும் இயேசு நாதா!

## 83. கவலைப்படாதே மனமே

கவலைப் படாதே மனமே - நீ
கவலைப் படாதே!
ஆண்டவர் நேரம் நெருங்கியது!
மகிமையின் மேகத்தில் வந்திடுவார்!
ஓசான்னா இயேசு ராஜா வாழ்க! (2)

1. என் தேவன் என் தேவை அறிவார்
நன்றியோடு அவரை நான் கூப்பிடுவேன்
என் ராஜா என்குறையைக் கேட்பார்
புகழ்ந்து அவரை நான் பாடிடுவேன்!

2. உம் அன்பை அறியாமல் இருந்தேன்
சத்துருவின் தந்திரத்தில் விழுந்து விட்டேன்!
உம் கரத்தை நீட்டி என்னை எடுத்தீர்!
உம் கிருபை போற்றி மகிழ்ந்திடுவேன்!

3. நான் செல்லும் பாதையிலே வந்தார்!
வல்லமையை கச்சையாக எனக்கு தந்தார்!
பாதுகாப்பு கேடயத்தைக் கொடுத்தார்!
உலகத்தை வென்று ஜெயித்திடுவேன்!

4. எந்நிலையில் போதுமென்ற மனமே
இவ்வுலகில் என்றுமே வாழ்ந்திடுவேன்
அதிசய ஆற்றலைப் பெறுவேன்
கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைத்திடுவேன்.

## 84. கலங்காதே மனமே திகையாதே

கலங்காதே மனமே திகையாதே மனமே உன்னுடன்
இருக்கின்றேன் நான் உன்னை சுமக்கின்றேன்

1. உலகம் உன்னை பகைக்கின்றதோ
உன்னை நானே அணைக்கின்றேன்

கலங்காதே திகையாதே உன்னுடனே நான் இருக்கின்றேன்
கலங்காதே திகையாதே உன்னை நானே சுமக்கின்றேன்

2. தாயும் தந்தையும் வெறுத்தார்கள்
எனக்கு உரியவன் நீ அல்லவா

3. தாயின் வயிற்றில் தேர்ந்தெடுத்தேன்
தந்தை உனக்கு நான் அல்லவா
4. வெண்ணாடை உனக்கு நான் தந்தேன்
வெற்றியும் உனக்கு நான் அல்லவா
5. மணிமுடி உனக்கு நான் சூட்டிடுவேன்
மன்னவன் உனக்கு நான் அல்லவா
6. உனக்காக மீண்டும் நான் வருவேன்
உன்னையும் என்னுடன் அழைத்துச் செல்வேன்

## 85. கர்த்தாவே உம்மை

ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே! - 2
கர்த்தாவே உம்மை நான் போற்றுவேன்
உம்மை எண்ணி என்றும் நான்
ஸ்தோத்தரிப்பேன்! -2

1. பெயர் சொல்லி அழைத்தவரே
கரம் பிடித்துக் காப்பவரே
கரம் பிடித்துக் காப்பவரே! -அய்யா (2)
2. நெருக்கத்தில் நடப்பவரே
நெஞ்சத்தில் வாழ்பவரே
நெஞ்சத்தில் வாழ்பவரே! - அய்யா (2)
3. அதிசயம் செய்பவரே
ஆறுதல் தருபவரே
ஆறுதல் தருபவரே! - அய்யா (2)
4. தனிமையில் வருபவரே
எதிர்வந்து அணைப்பவரே!
எதிர்வந்து அணைப்பவரே!-அய்யா (2)

## 86. கர்த்தாவே கர்த்தாவே

கர்த்தாவே கர்த்தாவே உம்மை துதிக்கிறோம்
பரிசுத்தமே உம்மை ஆராதிக்கிறோம்
அல்லேலூயா - 4

1. பாவ வாழ்க்கையில் இருந்தேனே - ஐயா
ஜீவப் பாதையில் நடத்துவீரே

2. அபிஷேக வல்லமையை தாருமே - ஐயா
அப்பா என்று நான் அழைப்பேனே

3. செங்கடல் எதிரே தெரிந்தாலும் - ஐயா
உம்கரம் என்னைத் தாங்கிடுமே

4. வனாந்தர வழிநடந்தாலும் - ஐயா
உம்திரு வார்த்தை ஜீவனாமே

5. துன்பங்கள் தொல்லைகள் வந்தாலும் - ஐயா
சோர்ந்து நான் போக மாட்டேன்

6. தூதர்கள் எக்காளம் முழங்க - ஐயா
மேகத்தின் மீது வருவீரே

## 87. சரணம் சரணம்

சரணம் சரணம் ஐயா
உமக்கே சரணம் ஐயா
இயேசுவே தேவ மைந்தனே
உம்பாதம் பணிகின்றேன்
உம்மையே பற்றிக்கொண்டேன்

1. மாட்சிமை நிறைந்தவரே
மாசில்லா கன்னியின் மகனாய் பிறந்தவரே
மகிமைக்கு எங்களை அழைத்தவரே - 2

2. சிலுவை சுமந்தவரே
   பரிகாரப் பலியாக ஜீவனைத் தந்தவரே
   பரிசுத்த இரத்தம் தெளித்தவரே -2

3. அனைத்தும் படைத்தவரே
   அப்பத்தின் வடிவில் எம்முடன் வாழ்பவரே
   அருள்மழை எனக்குப் பொழிபவரே - 2

4. இரக்கம் உள்ளவரே
   என்றும் எனக்குத் துணையாய் இருப்பவரே
   அன்பினால் என்னை ஆள்பவரே - 2

5. வல்லமை மிகுந்தவரே
   பாவங்கள் எல்லாம் சுமந்து தீர்ப்பவரே
   அபிஷேகம் எமக்குத் தருபவரே!

## 88. சாமக் காவலனாய்

சாமக் காவலனாய் ஜெபிப்பேன்
காவல் கோட்டையில் காவல் புரிவேன்
என் தெய்வம் இயேசு
சொல்லுக்காய் காத்திருப்பேன் (2)

1. காட்சித் தருவார் கனவிலும் பேசுவார்
   கண்ணீரெல்லாம் துடைத்திடுவார் (2)
   துன்பத்திலும் துணைவருவார் - மகனே
   நம்பிக்கை இழக்காதே (2) - நீ
   நம்பிக்கை இழக்காதே! (2)

2. கரங்களை பிடிப்பார் கனிவாய் தொடுவார்
   மான்களைப் போல் உன்னை மகிழவைப்பார் (2)
   இறந்ததையே மீட்டிடுவார் - மகனே
   நம்பிக்கை இழக்காதே (2) - நீ
   நம்பிக்கை இழக்காதே! (2)

3. ஆவியைப் பொழிவார் அபிஷேகம் தருவார்
திடமாய் உன்னை நடத்திடுவார் (2)
தினம் தினமே துணை வருவார் - மகனே
நம்பிக்கை இழக்காதே (2) - நீ
நம்பிக்கை இழக்காதே! (2)

## 89. சாட்சியக் கூடாரம்

சாட்சியக் கூடாரம் அமைத்திடுவோம்
கடவுளின் எக்காளம் முழங்கிடுவோம் (2)
வேதத்தின் சாட்சியாய் வாழ்ந்திடுவோம்
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்!
தரையில் விழுவோம்
கடவுளைத் தொழுவோம் (2)

1. வெண்ணாடை அணிந்திடுவோம்
குருத்தோலை ஏந்திடுவோம் (2)
வெற்றி முழக்கம் நாம் செய்திடுவோம்
செம்மறியின் இரத்தத்தில்
உயிர்பெறுவோம் (2)
அல்லேலூயா அல்லேலூயா (2)

2. ஜெபமாலை ஏந்திடுவோம்
தினந்தோறும் ஜெபித்திடுவோம் (2)
துன்பக்கடலை நாம் தாண்டிடுவோம்
செம்மறியின் இரத்தத்தில்
உயிர் பெறுவோம் (2)

3. உபவாசம் செய்திடுவோம்
சாத்தானை முறியடிப்போம் (2)
சூழ்ச்சி வலைகளை
நாம் அறுத்தெறிவோம்
செம்மறியின் இரத்தத்தில்
உயிர் பெறுவோம் (2)

4. அபிஷேகம் பெற்றிடுவோம்
கோலியாத்தை வென்றிடுவோம் (2)
தீயவன் கணைகளை தகர்த்திடுவோம்
செம்மறியின் இரத்தத்தில்
உயிர்பெறுவோம் (2)

5. பாங்குடனேப் பழகிடுவோம்
பரிசுத்தமாய் வாழ்ந்திடுவோம் (2)
மண்ணில் விண்ணகம் அமைத்திடுவோம்
செம்மறியின் இரத்தத்தில்
உயிர்பெறுவோம் (2)

## 90. சிலுவையில் அறையுண்ட

சிலுவையில் அறையுண்ட இயேசைய்யா
உம்முகம் பார்க்கின்றேன்
கண்ணீர் சிந்தி உம் பாதமே
என் முகம் பதிக்கின்றேன்!
பரிசுத்தரே இறைமகனே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!

1. உம்மையே வெறுமை ஆக்கினீரே
அடிமையின் கோலம் எடுத்தீரே!
உமது உயிரைத் தந்தீரே
அடிமை என்னை மீட்டீரே!

2. செந்நீர் வியர்வை வியர்த்தவரே
கண்ணீர் சிந்தி அழுதீரே!
கொடிய வேதனை அடைந்தீரே
பாவி என்னை நினைத்தீரே!

3. பாவமே அறியா பரிசுத்தரே
பாவத்தின் ரூபம் ஆனீரே!
நோய்களை எல்லாம் சுமந்தீரே
விடுதலை எனக்குத் தந்தீரே!

4. பரிந்து எமக்காய் பேசுவீரே
இரத்தத்தை கரத்தில் ஏந்துவீரே!
பாவக்கடனை தீர்த்தீரே!
ஜீவிய ஊற்றை திறந்தீரே!

## 91. செல்லுவோம் விரைந்து

செல்லுவோம் விரைந்து செல்லுவோம்
இயேசுவின் சீடர்களே விரைந்து செல்லுவோம்
சொல்லுவோம் எங்கும் சொல்லுவோம்
இயேசுவின் நாமத்தையே எங்கும் சொல்லுவோம்

1. உறங்கிக் கிடக்கும் விசுவாசிகளை
தட்டி எழுப்பிடுவோம்
உடைந்து போன உள்ளங்களை
கட்டி எழுப்பிடுவோம்

2. தன்னலம், சூழ்ச்சி பகைமைகளை நாம்
சுட்டு எரித்திடுவோம்
வஞ்சக சாத்தான் சதிகளையெல்லாம்
விரட்டி அடித்திடுவோம்

3. சிதறிப் போன ஆடுகளை எல்லாம்
ஒன்று சேர்த்திடுவோம்
இருளில் வாழும் குடும்பங்களை
ஒளியைக் காணச் செய்வோம்

4. அயலானோடு அன்பு செய்து
வாழ்ந்து காட்டிடுவோம்
மாமரி சூசை இயேசுவின் வழியில்
நாளும் வாழ்ந்திடுவோம்

5. அன்பு மகிழ்ச்சி அமைதி பொறுமை
பரிவைக் காட்டிடுவோம்
ஆவியார் காட்டும் நெறியிலே நடந்து
சாட்சி சொல்லிடுவோம்

6. உண்மை எதுவோ கண்ணியம் எதுவோ
இதையே பேசிடுவோம்
நீதி எதுவோ தூயது எதுவோ
இனிதாய் செய்திடுவோம்

## 92. குரல் எழுப்பும் இரத்தமே

குரல் எழுப்பும் இரத்தமே
கறை போக்கும் இரட்சகரே
எம்மையே காப்பீரய்யா
கண்ணீர் துடைப்பீரய்யா!
நன்றி நன்றி இயேசய்யா நன்றி! (2)

1. தளர்ந்துபோன கைகளையே
உயர்த்தி பிடிப்பீரே!
தள்ளாடும் எந்தன் கால்களையே
உறுதிப் படுத்துவீரே!

2. துயரம் பெருகும் உலகினையே
தாங்கி மன்னிப்பீரே!
சோர்வு தந்திடும் சுமைகளையே
சுமந்து தீர்ப்பீரே!

3. எதிர்த்துப் பொங்கும் அலைகளையே
கடிந்து கட்டினீரே!
வெடித்துப் பிளக்கும் பூமியையே
பரிந்துத் தாங்குவீரே!

# 93. குணமாக்கும் இயேசைய்யா

குணமாக்கும் இயேசைய்யா
என்னைக் குணமாக்கும்
இரட்சிப்பின் தைலம் பூசி
என்னை முற்றும் குணமாக்கும்

1. தண்ணீரோடுப் பேசினீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
இனிய இரசம் ஆனதே
ஸ்தோத்திரமே இயேசப்பா
அலைகளோடு பேசினீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
பேரமைதி உண்டானதே
ஸ்தோத்திரமே இயேசப்பா

2. குருடரோடு பேசினீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
கண்களில் ஒளியைப் பெற்றனரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
முடவனுக்கு சொன்னீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
கால்களில் பெலனை அடைந்தானே
ஸ்தோத்திரமே இயேசப்பா

3. பிணங்களோடு பேசினீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
ஜீவனைப் பெற்று எழுந்தனரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
பாவிகளோடு பேசினீரே
ஸ்தோத்திரமே இயேசப்பா
தேவ அமைதி உண்டானதே
ஸ்தோத்திரமே இயேசப்பா

4. பாவி என்னிடம் பேசுமைய்யா
ஸ்தோத்திரமே இயேசப்பா
பெலனடைந்து பாடிடுவேன்
ஸ்தோத்திரமே இயேசப்பா
எந்தன் நாவில் வாருமைய்யா
ஸ்தோத்திரமே இயேசப்பா
என் நெஞ்சில் தங்குமைய்யா
ஸ்தோத்திரமே இயேசப்பா

## 94. கேளுங்கள்... கொடுக்கப்படும்

அக்கினியாய் இறங்கிடுவார்
ஆவியைப் பொழிந்திடுவார்
கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்
தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்
தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்

1. மன்னிக்கும் வல்லமை மாசற்ற வல்லமை
விண்ணக வாழ்வுக்கு அச்சாரமே!
பரிசுத்த வல்லமை இருள்நீக்கும் வல்லமை
நமக்கு அதுவே ஆதாயமே!
நடத்திடுவார்! வழிநடத்திடுவார்! (2)

2. அன்பு செய்யும் வல்லமை ஆற்றல்தரும் வல்லமை
பரிசுத்த வாழ்வுக்கு அடையாளமே!
மகிழ்ந்திடும் வல்லமை புகழ்ந்திடும் வல்லமை
ஆவியில் நிறைந்திடும் ஆனந்தமே!
நடத்திடுவார்! வழிநடத்திடுவார்! (2)

# 95. கோடி ஸ்தோத்திரம்

கோடி ஸ்தோத்திரம் ராஜா
நல்ல இரட்சகரே இரக்கமுள்ளவரே - 2
கோடி ஸ்தோத்திரம் ராஜா கோடி ஸ்தோத்திரம் - 2

1. ஆண்டவரைத் தேடும் மக்களெல்லோரும்
இரக்கம் நாளும் பெறுவாரே - 2
சக்கேயுவை போல் இறங்கி வந்தால்
இயேசு உன்னை அணைப்பாரே - 2

2. பெருமூச்சு விட்டு கதறும் போது
தேவாதி தேவனவர் கேட்டிடுவாரே - 2
ஊதாரி மகனாய் திரும்பும்போது
இயேசு உன்னை அணைப்பாரே - 2

3. தனிமையில் நொந்து அழும்போது
ஆறுதல் உனக்குத் தருவாரே - 2
ஆண்டவரே என்று அழைக்கும்போது
ஆவியை உனக்குப் பொழிவாரே - 2

4. தேவாதி தேவனை இராப்பகலாய்
தேடிடும் தமது மக்களையெல்லாம் - 2
காத்திடுவாரே அணைத்திடுவாரே
கரம்பிடித்து நல்வழி நடத்திடுவாரே - 2

5. விசுவாசத்தோடு கூப்பிடும் போது
பயங்கள் யாவும் நீங்கும் அம்மா - 2
இயேசுவே என்று துதிக்கும்போது
பேய்கள் எல்லாம் ஓடும் அம்மா - 2

## 96. தெய்வமே இயேசுவே

தெய்வமே இயேசுவே
உம்மையே நேசிக்கிறேன் - 2
உள்ளத்தில் வைத்து ராஜா
உம்மையே துதிக்கின்றேன் - 2

1. உடலின் ஆசைகள் வேண்டாம் அப்பா
   உலகப் பெருமை வெறுத்தேன் அப்பா - உள்ளத்தில்
2. சோதனை நேரத்தில் தாங்கும் அப்பா
   வேதனை நேரத்தில் தேற்றும் அப்பா - உள்ளத்தில்
3. இன்பத்தில் துன்பத்தில் நீயே அப்பா
   தாய்போல் அணைப்பீர் தினமும் அப்பா - உள்ளத்தில்
4. உம்மாலே எல்லாம் ஆகும் அப்பா
   எங்கும் உம் மாட்சி விளங்கும் அப்பா - உள்ளத்தில்
5. சாமத்தில் உம்மை நினைத்தேன் அப்பா
   பெலன் குன்றும் நேரத்தில் தாங்கும் அப்பா!

## 97. தாருமே அப்பா தாருமே

தாருமே அப்பா தாருமே
வல்லமை ஆவியைத் தாருமே
மாற்றுமே அப்பா மாற்றுமே
பரிசுத்த ரூபமாய் மாற்றுமே!
ஆனந்தம் பேரின்பம் (4)

1. பாலை நிலங்கள் வளமாக
   உன்னத ஆவியை ஊற்றிடுமே!
   பாழ் மனங்கள் நேர்மைபெற
   பரிசுத்த ஆவியை ஊற்றிடுமே!

2. பூசல்கள் அகற்றி நன்மைசெய்ய
ஒற்றுமை ஆவியை ஊற்றிடுமே!
கணவன் மனைவியாய் ஜெபித்திடவே
கருணையின் ஆவியை ஊற்றிடுமே!

3. இளமையின் இச்சைகள் களைந்திடவே
பேரின்ப ஆவியை ஊற்றிடுமே!
தெய்வீகச் சாயலாய் என்றும் வாழ
தூய்மையின் ஆவியை ஊற்றிடுமே!

4. இயேசுவை அறிந்து அன்புசெய்ய
ஞானத்தின் ஆவியை ஊற்றிடுமே!
பேய்கள் ஓட்டி குணமளிக்க
இறைவாக்கு ஆவியை ஊற்றிடுமே!

5. கல்லான இதயம் கரைந்துருக
கனிவான ஆவியை ஊற்றிடுமே!
மனதின் காயங்கள் ஆறிடவே
மன்னிக்கும் ஆவியை ஊற்றிடுமே!

6. கண்ணீர் சிந்தி ஜெபித்திடவே
கிருபையின் ஆவியை ஊற்றிடுமே!
அன்பில் திடமாய் வாழ்ந்திடவே
அனல் மூட்டும் ஆவியை ஊற்றிடுமே!

## 98. தியாகத்தின் உருவே

தியாகத்தின் உருவே
தாய்மையின் வடிவே
கன்னி மரியே! நீ வாழ்க!
கலங்கரை விளக்கே
கரை சேர்ப்பவளே
கன்னி மரியே! நீ வாழ்க! (2)
நீ வாழ்க! (2) வாழ்க, வாழ்க! நீ வாழ்க! (2)

1. படைத்தவரை சுமந்தாயே
தினமும் பரிந்து உரைப்பாயே
பரிவுடனே பார்ப்பவளே
எம்மை பாசமாய் அணைப்பாயே (2)
நீ வாழ்க! (2) வாழ்க, வாழ்க! நீ வாழ்க! (2)

2. தூய்மையிலே உதித்தவளே
தேவனின் சிந்தையில் நிலைப்பவளே
கனிவுடனே காண்பவளே
தேவையில் எமக்காய் வருபவளே! (2)
நீ வாழ்க! (2) வாழ்க, வாழ்க! நீ வாழ்க! (2)

## 99. தேசமே எழுந்திரு

தேசமே எழுந்திரு தேசமே விழித்திரு
ஆண்டவரின் நாளும் நேரம் நெருங்கியதே! (2)

1. செம்மறியின் இரத்தத்தில்
முத்திரை பதித்திடு
தூய்மை என்னும் ஆடையை
அணிந்திடு!

2. தேவமுரசு கொட்டிடு
கதவுகளைத் தட்டிடு
மக்களை ஒன்றுக்கூட்டி
சேர்த்திடு!

3. ஆண்டவரின் வருகையில்
ஆயத்தமாய் இருந்திடு
சாட்சியாக நிலைத்து நீயும்
வாழ்ந்திடு!

4. விளக்குத் தண்டு எடுத்திடு
எண்ணெயால் நிரப்பிடு
மனுமகனை எதிர்கொண்டு
வந்திடு!

## 100. ஸ்தோத்திரம் ஐயா ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் ஐயா ஸ்தோத்திரம் - (2)
ஆண்டவரே என் ஒளி
ஆண்டவரே என் மீட்பு
யாருக்கு நான் அஞ்சவேண்டும்
எதற்கு நான் கலங்கவேண்டும் - (2)

1. எண்ணங்களை அறிந்தவரே
என் ஜெபம் கேட்பவரே! - (2)
கேடுவரும் நாளில்
கூடாரத்தில் என்னை
மறைத்துக் காப்பவரே! - (2)
ஸ்தோத்திரம் ஐயா ஸ்தோத்திரம் - (2)

2. ஏழைகளை அணைப்பவரே
கண்ணீரை துடைப்பவரே
பெலம்குன்றும் நாளில்
தோள்மீதிலே என்னை
தூக்கி சுமப்பவரே!
ஸ்தோத்திரம் ஐயா ஸ்தோத்திரம் - (2)

## 101. நெஞ்சே நீ புகழ்வாய்

அல்லேலூயா (3)
நெஞ்சே நீ புகழ்வாய் ஆண்டவரை
அனுதினம் துதித்திடுவாய்
உயிருள்ள வரையில் உன்னதரின் நிழலில்
அவர் திரு நாமத்தை உயர்த்திடுவாய்!
அல்லேலூயா (3)

1. மனிதனை நம்பாதே மதுவை நம்பாதே
மண்ணுக்கே திரும்பிடுவான் - அவன்
மண்ணுக்கே திரும்பிடுவான்!
யாக்கோபின் தேவன் உன் பக்கம் நிற்பார்
அவரே துணை வருவார் - என்றும்
அவரே துணை வருவார்! (அல்லேலூயா....)

2. பணத்தை நம்பாதே பதவியை நம்பாதே
ஒருநாள் அழிந்துவிடும் - அது
உன்னைவிட்டுப் பிரிந்துவிடும்
அன்பான தேவன் அழியாத செல்வம்
அவரே துணை வருவார் - என்றும்
அவரே துணை வருவார்! அல்லேலூயா...

3. உலகத்தை நம்பாதே உறவை நம்பாதே
வேதனைத் தந்துவிடும் - அது
கலங்கி தவிக்கவிடும்
நீதியின் தேவன் நிலையான பாறை
அவரே துணை வருவார் - என்றும்
அவரே துணைவருவார்! அல்லேலூயா....

## 102. தூய ஆவியே!

தூய ஆவியே தேவ அக்கினியே - 2
எழுவீர் தேவா எழுவீர்
என்நெஞ்சில் வருவீரே!

1. நிரப்பும் இப்போதே நிரப்பும்
தூய ஆவியே நிரப்பும் - 2
காற்றுகள் உமக்கு கீழ்படியும்
நெருப்புகள் உமது ஊழியனாம் - 2
எங்களின் வீடுகளில்
தூய ஆவியே நிரப்பும்!! - 2

2. மாற்றும் இப்போதே மாற்றும்
பாவி என்னையும் மாற்றும்
நெருப்பாய் பூமியில் விழுந்திடுவாய்
வல்லமையாய் இங்கு இறங்கிடுவாய்
எங்கள் குடும்பங்களில்
தூய ஆவியே நிரப்பும்!

3. தேற்றும் இப்போதே தேற்றும்
திடமாய் எம்மையே தேற்றும்
ஊற்றாய் பொங்கி பாய்ந்திடுவாய்
உயிராய் எம்மில் உறைந்திடுவாய்
எங்கள் உள்ளங்களில்
தூய ஆவியே நிரப்பும்

## 103. தூய நல்ல பிதாவே

தூயநல்ல பிதாவே
எங்கள்வல்ல கர்த்தாவே
உன்நாமம் போற்றணுமே - அய்யா
உம் மகிமைப் பெருகணுமே!
உம் சித்தமே பரிசுத்தமே
இங்கு என்றும் நிறையணுமே!
இங்கு என்றும் ஆகணுமே!

1. அப்பா என்னை பார்க்கணுமே
என் நெஞ்சில் பேசணுமே
முற்றும் சொந்தம் ஆக்கணுமே - அய்யா
உம்மை என்றும் அறியணுமே!

2. அப்பா உந்தன் திருகரத்தை
என்மீது வைக்கணுமே
காயம் எல்லாம் ஆறணுமே - அய்யா
முற்றும் தூய்மை ஆக்கணுமே!

3. அப்பா உந்தன் திருவசனம்
என் நெஞ்சில் எழுதணுமே
உம் அன்பு பாயணுமே - அய்யா
உம் அருகில் வாழணுமே! -3

## 104. தூயத் தண்ணீரே!

தூயத்தண்ணீரே ஜீவநதியே
பொங்கி வாருமே!
எந்தன் நேசரே தூய ஆவியே
தூய்மை ஆக்குமே! (2)
இரக்கத்தின் ஆவியே
என்னைப் பாருமே (2)

1. நீரைநோக்கி ஏங்கிஓடும்
கலைமான் போலவே
உம்மைநோக்கி ஏங்கிதவிக்கும்
பாவி நான் அய்யா! (2)
தாகம் தீரும் அய்யா
ஏழையைப் பாரும் அய்யா! (2) (தூயத்தண்ணீரே....)

2. பாலை வெளியில் களைத்து தவித்த
அடிமைப் போலவே
துன்ப உலகில் நொடிந்து தவிக்கும்
தாசன் நான் அய்யா (2)
தாகம் தீரும் அய்யா
ஏழையைப் பாரும் அய்யா! (2) (தூயத்தண்ணீரே....)

## 105. தூய ஆவியே துணையாக்

தூய ஆவியே துணையாக வருவீர்
இயேசுவின் சாட்சிகளாய்எம்மை மாற்றிடுவீர்

1. மனத்தின் தீமைகளை மன்னிக்க வருவீர்
மனத்தின் கீறல்களை மாற்றிட வருவீர்

2. மனத்தின் பாரங்களைப் போக்கிட வருவீர்
மனத்தின் காயங்களை ஆற்றிட வருவீர்

3. தாழ்வு மனம் நீக்கித் தேற்றிட வருவீர்
தடுமாறி நான் விழாமல் தாங்கிட வருவீர்

4. பாவப்பிடி நின்று மீட்டிட வருவீர்
பாவக் கறை கழுவி தூய்மை தர வருவீர்

5. கல் மன இதயத்தைத் கரைத்திட வருவீர்
இதயத்தின் வெறுப்புகளை விலக்கிட வருவீர்

6. அலகையின் வலை அறுத்து விடுதலை தருவீர்
அன்பின் வழி நடக்க அன்பைத் தந்திடுவீர்

## 106. நடந்து வந்த பாதையெல்லாம்

நடந்து வந்த பாதையெல்லாம்
சுமந்து வந்த என்இயேசைய்யா!
உம்மோடு இருப்பதுதான்
எனது மேலான ஆசை ஐயா!

1. அடிமையின் வாழ்வினிலே
அதிசய விடுதலையே
நித்திய வானகத்தில்
நிரந்தர குடியிருப்பே!

2. விண்ணக மருத்துவரே
மங்காத நட்சத்திரமே
ஆன்மாவின் மணவாளனே
அருள்தரும் தெய்வமே!

3. இதயத்தைக் காண்பவரே
எண்ணத்தை அறிபவரே
அமைதியைத் தருபவரே
சத்தியம் ஆனவரே!

4. நம்பிக்கைக் குரியவரே
நன்மைகள் செய்பவரே
அநீதியை அழிப்பவரே
நீதியைக் கொணர்ந்தவரே

5. மகிமையின் ஆண்டவரே
மறுரூபம் ஆக்குவீரே
அழைத்துச் செல்பவரே
உயர்த்தி மகிழ்பவரே!

## 107. நன்றி உமக்கே

நன்றி உமக்கே நன்றி உமக்கே
தேவனே நன்றி உமக்கே
மகிமை உமக்கே மகிமை உமக்கே
என்றும் மகிமை உமக்கே!

1. உமது செயல்களெல்லாம் மகத்தானதே
என்றும் மகத்தானதே
உமது வழிகளெல்லாம் அதிசயமானதே!
உம்மை எண்ணி எண்ணி
என்றும் இன்பம் காண்பேன்!

2. உமது பெயரை சொன்னால் உயர்வாகுமே
என்றும் உயர்வாகுமே!
உமது வல்லமையினால் மலையாய்
உயர்ந்திடுவேன்
உம்மை எண்ணி எண்ணி......

3. உமது கருணையினால் நிறைவாகுமே
எல்லாம் நிறைவாகுமே!
உமது இரக்கத்தினால் நிலையாய் வாழ்ந்திடுவேன்!
உம்மை எண்ணி...

4. உமது வார்த்தையினால் குணமாகுவேன்
என்றும் குணமாகுவேன்!
உமது பாசத்திலே என்றும் மகிழ்ந்திடுவேன்
உம்மை எண்ணி...

## 108. நன்றி ராஜா

நன்றி ராஜா (2) இயேசுவே
நன்றி ராஜா!
உம்முடைய வல்லமையும்
உம்முடைய கிருபையும்
உம்முடைய பார்வையும்
உம்முடைய பேரன்பும்
போதும் அய்யா (2) எனக்கு
போதும் அய்யா!

1. நான் உமது கூடாரத்தில்
எந்நேரமும் தங்கியிருப்பேன்! -2
நான் உமது இறக்கைகளின்
பாதுகாப்பில் தஞ்சம்புகுவேன்! -2

2. நான் உமது நதிக்கரையில்
எந்நேரமும் அமர்ந்திருப்பேன்! -2
நான் உமது ஊற்றினிலே
இலவசமாய் உண்டுகளிப்பேன்! -2

3. நான் உமது திருப்புகழை
எந்நேரமும் பாடிடுவேன்! -2
நான் உமது வார்த்தையினை
நெஞ்சில்வைத்து மகிழ்ந்திடுவேன்! -2

## 109. நன்றி சொல்லுவேன் என்றும்

நன்றி சொல்லுவேன் என்றும் நன்றி சொல்லுவேன் - என்
ஆண்டவர்க்கு நன்றி சொல்லுவேன்! - 2
இரக்கமுள்ளவர் நம் ஆண்டவர்
என்னோடு என்றும் வாழ்பவர்
எந்நாளும் உம்மை நான் பாடித் துதிப்பேன்
எந்நாளும் உம்மை நான் பாடி மகிழ்வேன்! - 2

1. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்ந்த எனக்கு
உம்மிடம் இருப்பது இன்பமானது - ஐயா
எனக்கு இன்பமானது!

2. வழி தவறிய ஆடாக அலைந்து திரிந்தேன்
என்னைத்தேடி வந்துநீர் அணைத்துக் கொண்டீரே-ஐயா
என்னை அணைத்துக்கொண்டீரே!

3. உன்னதத்தில் அடைக்கலத்தில் நான் வாழ்கிறேன்
உலகத்தின் தொல்லைகள் என்ன செய்திடும் - ஐயா
தொல்லைகள் என்ன செய்திடும்!

4. உம்மீது நம்பிக்கை வைத்த எனக்கு
ஒருநாளும் தோல்விகள் என்பதில்லையே - ஐயா
தோல்விகள் என்பதில்லையே!

## 110. நண்பனே நண்பனே

நண்பனே நண்பனே
உன் இதயம் கலங்கிடுமோ
நிலைத்திடு நிலைத்திடு
அவர் அன்பில் இணைந்திடு! (2)

3. உமது தாயைக் கொடுத்தீரய்யா
உந்தன் அன்பை போற்றிடுவேன்
(இயேசுவே) நேசரை போற்றிடுவேன்! (நித்திய...)

4. உணவாய் உம்மை தருபவரே
வார்த்தையால் எம்மைத் தேற்றுவீரே
இயேசுவே தேற்றுவீரே! (நித்திய...)

## 112. நினைவெல்லாம் நீயே!

நினைவெல்லாம் நீயே அம்மா!
தெய்வத் தாய்மரியே! (2)
கடைக்கண் பார்ப்பாய்
கருணைக் காட்டுவாய்
அம்மா உன் கரம் நீட்டுவாய்
அம்மா உன் அருள் தருவாய்
நினைவெல்லாம் நீயே....

1. ஆண்டவரின் பார்வைக்கு நலமாய் நானிருக்க
மாமரியே உன் இதயத்துக்கு இதமாய் நான் நடக்க! (2)
துணை செய்வாய் துயர் துடைப்பாய்
எமக்கு வரம் அருள்வாய் (2)
(கடைக்கண்..........)

2. பாவமெல்லாம் நீங்கி நின்று
உன்னையே பார்த்திருக்க
மாமரியே இயேசுவுக்குள்
அன்பாய் நிலைத்திருக்க (2)
துணை செய்வாய் துயர் துடைப்பாய்....
எமக்கு வரம் அருள்வாய்! (2)
(கடைக்கண்........)

## 113. நேற்றும் இன்றும்

நேற்றும் இன்றும் என்றும்
மாறாததேவன் இயேசு கிறிஸ்து
வரஇருப்பவரே வந்திடுவார்
புகழ்ச்சிப்பலி கொடுப்போம் - நாம் (2)

1. இயேசுவின் திருரத்தம்
உடன்படிக்கையின் இரத்தம்
உன்னையும் என்னையும் கழுவிவிடும்
பரலோக மகிமைக்கு கொண்டுசேர்க்கும்!

2. கல்வாரி திருப்பீடமே
மகிமையின் கூடாரமே
அங்கே நாளும் தங்கிடுவோம்
அதிசய தேவனை துதித்திடுவோம்!

3. இயேசுவின் காயங்களால்
நாமும் குணமடைந்தோம்
அவரது சாயலாய் மாறிடுவோம்
புதிய இயல்பை அணிந்துகொள்வோம்!

4. ஆவியில் நிறைந்திடுவோம்
அன்பில் நிலைத்திடுவோம்
விழிப்பாய் என்றும் ஜெபித்திடுவோம்
சத்துருவை துரத்தி விரட்டிடுவோம்!

## 114. நேரம் நெருங்குதே

நேரம் நெருங்குதே ஐயா நேரம் நெருங்குதே
மாட்சிமிகு மன்னர் வரும் காலம் நெருங்குதே
பரிந்து ஜெபித்திடு பணிந்து துதித்திடு
இயேசுவே ஆண்டவரென அறிக்கை செய்திடு

1. அன்பு குறையுதே இறை அருளை இழக்குதே
அன்பை இழந்து பண்பை இழந்து
நரகம் போகுமே ஆன்மா நரகம் போகுமே

2. பகைகள் வளருதே மனதில் பாசம் குறையுதே
உறவு முறிந்து உள்ளம் மாறி
நரகம் போகுமே ஆன்மா நரகம் போகுமே

3. பாவம் செய்யுதே பிறரை பழித்து பேசுதே
தன்னலத்தால் தலைகனத்து
நரகம் போகுமே ஆன்மா நரகம் போகுமே

4. பெருமை கொள்ளுதே மனம் அகந்தை கொள்ளுதே
பொறாமை கோபம் கொண்டு வாழ்ந்து
நரகம் போகுமே ஆன்மா நரகம் போகுமே

## 115. பலியாக வந்த தெய்வமே

பலியாக வந்த தெய்வமே
பரிசுத்தம் ஆனவரே
உம்ரத்தம் சிந்தி என்பாவம் போக்கி
என்னோடு வாழ்பவரே - ஐயா
என் ஜீவன் ஆனவரே!

1. வலப்புறம் அமர்ந்து வல்லமையாய் எமக்கு
பரிந்து பேசுவீரே!
தயவுடன் நோக்கி தாசனாம் என்னை
தூக்கி அணைப்பீரே!
ஐயா ஸ்தோத்திரமே! (3)

2. சிலுவையில் தொங்கி என்னையும் நினைத்து
தாகம் என்றீரே!
அடிமையும் என்னை இரக்கம் கொண்டு
இதயத்தில் தாங்கினீரே!
ஐயா ஸ்தோத்திரமே! (3)

3. இதயத்தைத்திறந்து பாசமாய் எமக்காய்
உயிரை கொடுத்தீரே!
கரங்களை நீட்டி ஏழையும் என்னை
எடுத்து உயர்த்தினீரே!
ஐயா ஸ்தோத்திரமே! (3)

4. தூதர்கள் நடுவில் மகிமையில் ஒருநாள்
மேகத்தில் வருவீரே!
கவலைகள் போக்கி துயரம் துடைத்து
ஆறுதல் தருவீரே!
ஐயா ஸ்தோத்திரமே! (3)

## 116. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பரிசுத்தர்
உன்னை அழைக்கும் கடவுள்
பரிசுத்தர் (4)
உன்னை பார்க்கும் கடவுள்
பரிசுத்தர் (4)
உன்னை அழைக்கும் கடவுள்
உன்னை பார்க்கும் கடவுள்
பரிசுத்தர் (4)

1. ஓரேபு மலையில் காட்சி தந்தார்
நெருப்பு உருவத்தில் கொழுந்துவிட்டார்!
பாவமான உன் காலணியை
கழற்றிடுவாய் மகனே நீ!
பரிசுத்தமான பூமியிலே
நுழைந்திடுவாய் என்றென்றும் நீ!
நுழைந்திடுவாய்! என்றென்றும்!

2. தபூரு மலையில் இறங்கிவந்தார்
மேக உருவத்தில் குரல் கொடுத்தார்
தேவ ஸ்நேக ஆவியிலே
வாழ்ந்திடுவாய் மகனே நீ!
பரிசுத்தமான பூமியிலே
நுழைந்திடுவாய் என்றென்றும் நீ!
நுழைந்திடுவாய்! என்றென்றும்!

3. திருமண விருந்தில் பங்குகொண்டார்
திராட்சை உருவத்தில் அருள்பொழிந்தார்
மகிமையான உன் வல்லமையை
அணிந்திடுவாய் மகனே நீ!
பரிசுத்தமான பூமியிலே
நுழைந்திடுவாய் என்றென்றும் நீ!
நுழைந்திடுவாய் என்றென்றும்!

## 117. பரிசுத்த ஆவியை பெற்றோமே

பரிசுத்த ஆவியை பெற்றோமே
பரிசுத்த ஆலயமாய் வாழ்வோமே - 2
அல்லேலூயா தோத்திரமே - 2

1. இரட்சகரின் விலாவிலே ஊற்றெடுத்த ஆவியாரே
எங்களில் வாருமைய்யா - 2
பாவிகளை மீட்டிவே பரலோக முத்திரையாய்
எங்களில் தாங்குமைய்யா - 2

2. நிலையில்லா இவ்வுலகில் உறுதியாய் வாழ்ந்திடவே
துணையாய் வாருமைய்யா - 2
அலகையை! வென்றுநீர்
வெற்றிக்கொடி பிடிக்கையில்
கலக்கங்கள் ஓடுமைய்யா - 2

3. கண்ணீர் வடிக்கின்றோம்
வேதத்தை படிக்கின்றோம்
பாதையை காட்டுமைய்யா - 2
துன்பத்திலும் கன்மலையே உம்மையே துதிப்போம்
வல்லமை தாருமைய்யா - 2

4. ஆண்டவரின் விருந்திலே அன்புடன் கலந்திடவே
கிருபை தாருமைய்யா - 2
பரிசுத்த தேவனே மகிமையின் ஆடையாய்
பரிசாக வாருமைய்யா - 2

## 118. பரிசுத்த ஆவியே

பரிசுத்த ஆவியே
பரலோக வல்லமையே
ஸ்தோத்திரம் அப்பா ஸ்தோத்திரம்!
வாருமே அப்பா வாருமே
அக்கினியால் எம்மை நிரப்பும்

1. இறுதிநாள் நெருங்கியதே
இயேசு இராஜா வருவாரே
பாவ தோஷம் நீங்கிடவே
பரம ஜோதியாய் இறங்கிடுமே!

2. மீட்பின் முத்திரையே
வெற்றித் திருக்கொடியே
விசுவாசக் கேடயமே
வஞ்சகப் பேயை ஓட்டிடுமே!

3. முதியோர் இளைஞருமே
கனவுகள் காண்பாரே
காட்சி வரங்கள் அருள்வீரே
சாட்சியாக நிறுத்துவீரே!

4. பிதாவின் திருவிரலே
நோய்களைத் தீர்ப்பவரே
இறைவாக்கு வரம் வேண்டும்
புதுமைகள் இன்று செய்யவேண்டும்

5. தீமையை எதிர்த்து நிற்போம்
திடமாய் ஜெபித்திடுவோம்
ஆண்டவரின் வருகையிலே
பரிசுத்தமாய் நின்றிடுவோம்!

## 119. பரலோக ராஜனே

பரலோக ராஜனே பரிசுத்த ராஜாவே
பலியாக்கப்பட்ட திருச்சுதனே!
வாழ்க வாழ்கவே! இன்றும் என்றுமே!

1. திறந்திடுவார் அவர் திறந்திடுவார்
விண்ணகக் கதவைத் திறந்திடுவார்
வாழ்பவர் அவரே வருபவர் அவரே
வல்லவர் அவரையே ஆராதிப்போம்!

2. அணிந்திடுவோம் நாம் அணிந்திடுவோம்
இரத்தத்தின் முத்திரை பதித்திடுவோம்!
தூய்மையின் ஆடையை உடுத்திடுவோம்!
தூயவர் இயேசுவை ஆராதிப்போம்!

3. ஜெபித்திடுவோம் நாம் ஜெபித்திடுவோம்
செம்மறியின் முன்னிலையில் பணிந்திடுவோம்
அவருக்கு மகிமை செலுத்திடுவோம்
ஆவியில் என்றும் நிரம்பிடுவோம்!

4. அகமகிழ்வோம் நாம் அகமகிழ்வோம்
மீட்பராம் இயேசுவை சந்திப்போம்
அவரையே ஏத்திப் போற்றிடுவோம்
அவரையே துதித்து ஆராதிப்போம்!

## 120. பரலோக வல்லமை

பரலோக வல்லமை பரிசுத்த வல்லமை
ஆவியின் வல்லமை அபிஷேக வல்லமை
பொழியுமே எம்மேலே அப்பா
பொழியுமே எம்மேலே

1. பாரமான பாவங்களை - அப்பா
சங்காரம்செய்யுமே - எம்மை
பரிசுத்தமாக்குமே - 2 அல்லேலூயா - 2

2. நொந்து வந்த பிள்ளைகளை - அப்பா
பொங்கி எழுந்து தாங்குமே - இன்று
வல்லமை தாருமே - 2 அல்லேலூயா - 2

3. இச்சைகளை சுட்டெரித்து - அப்பா
உயிராய் தங்குமே எம்மில்
ஊற்றாய் பாயுமே - 2 அல்லேலூயா - 2

4. நோய்களெல்லாம் தீர்த்திடவே - அப்பா
பேய்களை ஓட்டிடவே - உந்தன்
வல்லமை தாருமே - 2 அல்லேலூயா - 2

## 121. பார்வையெல்லாம் தூய்மையாக்கும்

பார்வையெல்லாம் தூய்மையாக்கும் ஆவியாரே!
சிந்தையெல்லாம் சுத்தமாக்கும் ஆவியாரே!
இன்றும் என்றும் வழிநடத்தும் - என்னை
வழிநடத்தும்!

1. கல்லான இதயத்தை கரைத்து உருக்கும்
தூய ஆவியாரே!
கனிவுள்ள நெஞ்சத்தை தந்து அருளும்
பரிசுத்த ஆவியாரே!

2. பொல்லாத காயத்தில் எண்ணெய் ஊற்றும்
   தூய ஆவியாரே!
   காயப்பட்டு கிடக்கும் என்னை எழுப்பி
   குணமாக்கும் ஆவியாரே!

3. பேய்களை அதட்டி நோய்களை போக்கும்
   தூய ஆவியாரே!
   தாகமுள்ள உள்ளத்தில் ஆறாய் ஓடும்
   பரிசுத்த ஆவியாரே!

4. பெந்தகோஸ்து நாளில் நாவாய் அமர்ந்து
   தூய ஆவியாரே!
   இறைவாக்கு உரைக்க எமக்கு அருளும்
   பரிசுத்த ஆவியாரே!

5. பகைமை பிரிவினை, பிளவுகள் நீக்கும்
   தூய ஆவியாரே!
   அன்பு மகிழ்ச்சி அமைதி பொறுமை
   பொழிந்திடும் ஆவியாரே!

## 122. பாடிடுவோம் பாடிடுவோம்

பாடிடுவோம் பாடிடுவோம்
இறைமகன் இயேசுவையே!
புகழ்ந்திடுவோம் புகழ்ந்திடுவோம்
உன்னதர் நாமத்தையே!
போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
ஆராதிப்போம் நாம் ஆராதிப்போம்

1. படைத்தவரை போற்றிடுவோம்
   அதிசய தேவனைத் துதித்திடுவோம்
   இயேசுவையேப் பார்த்திடுவோம்
   அவர்தம் இரக்கத்தைப் பெற்றிடுவோம்!

2. பரிசுத்தரை போற்றிடுவோம்
பாதத்தில் விழுந்து துதித்திடுவோம்
உயர்ந்தவரை நோக்கிடுவோம்
உன்னத வல்லமை அணிந்திடுவோம்

3. வல்லவரைப் போற்றிடுவோம்
வாழ்கின்ற தேவனை துதித்திடுவோம்
உத்தமர் குரலைக் கேட்டிடுவோம்
அவருக்குப் பணிந்து வாழ்ந்திடுவோம்

4. நல்லவரைப் போற்றிடுவோம்
நித்திய தேவனை துதித்திடுவோம்
ஆண்டவரை ஆராதிப்போம்
அவர்தம் அன்பினை ஆர்ப்பரிப்போம்.

## 123. பாவியிலும் நான்

பாவியிலும் நான் பெரும் பாவி
இயேசுவே என்னை மன்னியும்
இந்த வேளையில் என்னை மன்னியும்
நல்ல இயேசுவே என்னை மன்னியும் - 2

1. உமக்கெதிராய் பாவம் செய்தேன்
உலக ஆசையில் மூழ்கினேன்
உன்னை விட்டு விலகிப் போனேன்
இந்த வேளையில் என்னை மன்னியும்

2. பொறாமையால் தவறாய் நினைத்தேன்
பகையால் தீமையை செய்தேன்
உன்னை விட்டு விலகிப் போனேன்
இந்த வேளையில் என்னை மன்னியும்

3. இச்சைகளால் பாவம் செய்தேன்
கோபத்தால் கடினமானேன் - உன்னை

4. அசுத்த பேச்சால் பாவம் செய்தேன்
காம உணர்ச்சியால் வலுவிழந்தேன் - **உன்னை**

## 124. புதுப் பெயரைத் தந்த தேவன்

புதுப் பெயரைத் தந்த தேவன் - எனக்கு
மகுடம் சூட்டி மகிழ்ந்தாரே - 2
மீட்பின் ஆடையை உடுத்தி - என்னை
மணவாட்டி என்று அழைத்தார்! - 2
வல்லமையும் மகிமையும் உமக்கே ஐயா!
இன்றும் என்றும் நித்தியமும் உமக்கே ஐயா! - 2

1. தள்ளப்பட்ட என்னையே
அன்புடையாள் என்றீரே
ஆண்டவரின் நகரம் என்றீர்
கறைபடாமல் காப்பேன் என்றீர்! - **வல்லமையும்**

2. மகிழ்ச்சி பொங்கும் வீட்டிலே
பங்கு எனக்குக் கிடைத்தது
உரிமை வாழ்வு எனக்குத் தந்தீர்
எந்நாளும் பெருமை தந்தது! - **வல்லமையும்**

3. காயப்பட்ட என்னையே
இரத்தத்தால் கழுவி
உன் கடவுள் நானே என்றீர்
உமக்கு என்னை சொந்தமாக்கினீர்!

4. உறுதி தரும் ஆவியை
உள்ளுயிராய் பொழிந்து
ஜீவ ஊற்றை திறந்தீரே!
ஆறாகப் பெருகிப் பாயுமே!

## 125. பிரசன்னம் பிரசன்னம்

பிரசன்னம் பிரசன்னம் தேவபிரசன்னம்
மகிழ்ச்சிதரும் தேவபிரசன்னம்
நம்பிக்கைதரும் தேவபிரசன்னம்!

1. பாவிகளை மீட்கும் பாவங்களை போக்கும்
பரிசுத்தமாக்கும் பிரசன்னம்
பரவசமாக்கும் பிரசன்னம்!

2. காயங்களை ஆற்றும் கறைகளை நீக்கும்
கருணைமிகு தேவபிரசன்னம்
பரவசமாக்கும் பிரசன்னம்!

3. மேகத்திலே தோன்றும் மகிமையில் சேர்க்கும்
வல்லமைதரும் தேவபிரசன்னம்
பரவசமாக்கும் பிரசன்னம்!

## 126. பொங்கியெழும் ஊற்றே

பொங்கியெழும் ஊற்றே
மகிமையின் அச்சாரமே - (2)
ஆவியே வல்லமையே
வாருமே! வரம் தாருமே! - (2)

1. என்தாகம் தீர்க்கணுமே
என் நெஞ்சம் மகிழணுமே

2. கானாவூர் கல்யாணத்தில்
ரசமாக வந்தவரே!

3. பகைமையை ஒழிப்பவரே
பாசத்தைப் பொழிபவரே!

4. தூயநீரை தெளிப்பவரே
தூய்மையாய் ஆக்குவீரே!

5. காட்சிகள் தருவீரே
சாட்சியாய் நிறுத்துவீரே!

6. அபிஷேக நாதரே
அணையா ஜோதியே!

7. பெந்தகோஸ்தோ பெருநாளில்
நிறைவாய் வந்தவரே!

8. சாபத்தை நீக்குவீரே
சமாதானம் தருவீரே!

9. துன்பத்தில் துணையாளரே
ஆறுதல் அளிப்பவரே!

10. திருமுழுக்கு யோவானுக்கு
அருளாக வந்தவரே!

## 127. மனமே நீ மறவாதே

மறவாதே நீ மறவாதே
மனமே நீ மறவாதே! (2)

1. பசியை தீர்க்க மன்னாவை
தாகம் தீர்க்க தண்ணீரை (2)
அதிசயமாய் செய்த ஆண்டவரை
மனமே நீ மறவாதே

2. உலர்ந்து போன நம் எலும்புகளை
எழுந்து நிற்க செய்தவரை
வல்லமை தந்த ஆண்டவரை
மனமே நீ மறவாதே

3. மேகத்தூணாய் வந்தவரை
கடலில் பாதை அமைத்தவரை
மகிமையில் வருகின்ற ஆண்டவரை
மனமே நீ மறவாதே

4. சிலுவை சுமந்து சென்றவரை
   இரத்தம் சிந்தி மீட்டவரை
   நமக்காய் உயிரை கொடுத்தவரை
   மனமே நீ மறவாதே

5. குருடரை பார்க்கச் செய்தவரை
   முடவரை நடக்க வைத்தவரை
   அதிசயமாய் செய்த ஆண்டவரை
   மனமே நீ மறவாதே

## 128. மனமே மனம்திரும்பு

மனமே மனம்திரும்பு
இன்றே மனம்திரும்பு
ஆண்டவர் வருகை அண்மையில் உள்ளது
மனமே மனம்திரும்பு - 2

1. வேதனையோ சோதனையோ
   மனமே மனம்திரும்பு
   துன்பங்களோ துயரங்களோ
   மனமே மனம்திரும்பு
   உம்மேல் இரங்கிடுவார்
   ஆவியைப் பொழிந்திடுவார் (மனமே..............)

2. ஏழைகளும் செல்வந்தரும்
   மனமே மனம்திரும்பு
   இளைஞர்களும் முதியவரும்
   மனமே மனம்திரும்பு
   உன்மேல் இரங்கிடுவார்
   ஆவியைப் பொழிந்திடுவார்! (மனமே..............)

## 129. மனமிரங்கும் இயேசுவே

மனமிரங்கும் இயேசுவே
எம்மீது மனமிரங்கும்
என்பாவம் பொறுத்தருளும் (2)

1. சிலுவையில் மரித்த பரிசுத்தரே!
பாவி என்மேல் மனமிரங்கும்
சகலமும் படைக்கக் காரணமே!
பாவிஎன்மேல் மனமிரங்கும் (மனமிரங்கும் இயேசுவே)

2. பலியான தேவ செம்மறியே! பாவி..............
சகல வல்லமை உடையவரே! பாவி..............

3. இரக்கம் நிறைந்த பெரியவரே! பாவி..............
இதயத்தை எனக்காய் திறந்தவரே! பாவி..............

4. பிணிகளைப் போக்கும் மருத்துவரே! பாவி..............
பாவங்கள் சுமந்த செம்மறியே! பாவி..............

5. உடலை உணவாய் ஈந்தவரே! பாவி..............
உயிராய் எம்மில் வாழ்பவரே! பாவி..............

6. பரிசுத்த தைலம் பூசுவீரே! பாவி..............
மனத்தின் காயங்கள் ஆற்றுவீரே! பாவி..............

7. பரிவுடன் எம்மை பார்ப்பவரே! பாவி..............
பாசமாய் எம்மை அணைப்பவரே! பாவி..............

## 130. மகிமை மன்னனே

மகிமை மன்னனே!
சிலுவை நாயகனே!
ஓசான்னா (3)

1. நோய்களைத் தீர்த்தவரே, பேய்களை துரத்தினீரே
கரங்கள் நீட்டி, காயங்கள் ஆற்றி
வரங்கள் தருவீரே! ஓசன்னா (3)
2. சிலுவையை சுமந்தவரே, இரத்தம் சிந்தினீரே
ஜீவன் தந்து உலகை மீட்டு
ஆவியைப் பொழிந்தவரே! ஓசன்னா (3)
3. மாட்சிமை நிறைந்தவரே, பரமேறிச் சென்றீரே
பிதாவின் முன்பு எமது சார்பில்
பரிந்து பேசுவீரே! ஓசன்னா (3)
4. நீதி உள்ளவரே மீண்டும் வருபவரே
செங்கோல் ஏந்தி திறவுகோல் கொண்டு
அழைத்துச் செல்வீரே! ஓசன்னா (3)

## 131. மகிமை மகிமை

மகிமை மகிமை மகிமை (2)
யூத சிங்கம் இயேசு ராஜாவுக்கே!
மகிமை மகிமை மகிமை (2)

1. கண்ணீர் சிந்தியே கல்லறை வாசலை
கட்டவிழ்த்து எழுப்பினாரே!
பாவத்தில் மடிந்த பாவி என்னையும்
பரிசுத்த வாழ்வுக்கு அழைத்தாரே!
2. படுக்கையில் கிடந்த திமிர்வாத மகனை
மன்னித்து தூக்கினாரே!
பாரத்தால் துடித்த பாவி என்னையும்
பாசத்தைப் பொழிந்து தாங்கினாரே!
3. அன்போடு பேசி சமாரியப் பெண்ணின்
தாகத்தை தீர்த்தாரே!
அழுது ஜெபிக்கும் ஏழை என்னையும்
ஆறுதல் தந்து அணைத்தாரே!

4. கடைக்கண் நோக்கியே பேய்பிடித்த மகளை
விடுதலை செய்தாரே!
தரையில் கிடந்த பாவி என்னையும்
பரலோக மகிமைக்கு உயர்த்தினாரே!

## 132. மகிமையின் நாமம்

1. வானவர் மண்ணவர் போற்றிடும் நாமம்
எளியவர் யாவரும் சுகம்பெறும் நாமம்
மகிமையின் நாமம் இயேசுவின் திருநாமம்
போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
என்றும் வென்றிடுவோம்!

2. முடங்கிய கால்களை எழுப்பிடும் நாமம்
குறுகிய கைகளை உயர்த்திடும் நாமம்

3. பேய்களை எல்லாம் ஓட்டிடும் நாமம்
நோய்களை எல்லாம் போக்கிடும் நாமம்

4. மனத்தின் புண்களை ஆற்றிடும் நாமம்
உள்ளத்தின் வேதனை நீக்கிடும் நாமம்

5. பயங்கள் எல்லாம் போக்கிடும் நாமம்
பாவங்கள் எல்லாம் கழுவிடும் நாமம்

6. சிறியவர் பெரியவர் வணங்கிடும் நாமம்
சமாதானம் உள்ளத்தில் திளைத்திடும் நாமம்

## 133. மனுக்குலம் மீட்புப் பெற

மனுக்குலம் மீட்புப் பெற வேண்டுகிறேன் - அப்பா
பாவ சாபம் நீங்கிடவே வேண்டுகிறேன்
சிலுவை இரத்தம் தெளிக்கப்பட வேண்டுகிறேன் - அப்பா
இரத்தம் சிந்தி சாட்சியாக வேண்டுகிறேன்

1. பரிசேயர் கூட்டம் இங்கு திருந்திட வேண்டும் - ஐயா
   பரிசுத்தர் இயேசுவையே துதித்திட வேண்டும்
   மறைநூல் ஞானி மனம் மாறிடவேண்டும் - ஐயா
   தெருக்களில் இயேசுவையே அறிவிக்க வேண்டும்

2. சாதி சுவர்கள் இங்கு தகர்ந்திட வேண்டும் - ஐயா
   சாமக் காவலனாய் ஜெபித்திட வேண்டும்
   உயர்வு தாழ்வுகள் மறைந்திட வேண்டும் - ஐயா
   உத்தமர் வருகையில் உயிர்த்திட வேண்டும்

3. உலகம் இரட்சகரை அறிந்திட வேண்டும் - ஐயா
   உபவாச கூட்டம் எங்கும் பெருகிட வேண்டும் - ஐயா
   இளைஞர்கள் ஒளிவிளக்காய் எழும்பிட வேண்டும்
   எங்கும் இயேசுவின் சிலுவைக் கொடி ஏற்றிடவேண்டும்

## 134. மனிதா மனிதா

மனிதா மனிதா நீ எப்படி வாழ்கிறாய்?
கவலை சுமந்து நீ வாழ்வது ஏனோ?

1. எனது சாயலாக நான்
   உன்னைப் படைத்தேனே
   பரிசுத்தமாய் வாழ்ந்திடவே
   உன்னை அழைத்தேனே - 2

2. முன்பு இருந்த அன்பு
   இன்று உனக்கு இல்லையே
   முன்பு இருந்த ஆர்வம்
   உனக்கு குறைந்து போனதே - 2

3. என்னுடன் அமர்ந்து நீ
   ஜெபிக்க மறந்தாய்
   உலக பாச வலையில் நீ
   உழன்று தவிக்கிறாய் - 2

4. என் ஜனமே உனக்கு நான்
என்ன செய்யவில்லை
எதிலே உனக்குக் குறைவைத்தேன்
என்னிடம் நீ சொல் - 2

5. உனக்காக உலகில் வந்து
சிலுவை சுமந்தேனே
உன் மீட்புக்காக உயிர் கொடுத்து
இரத்தம் சிந்தினேனே - 2

## 135. மன முருகும் தெய்வம்

மனமுருகும் தெய்வம் அய்யா
மன்னித்து அணைத்திடுவார்!
என்னையுமே தூக்கிடுவார்
விடுதலைத் தந்திடுவார்! - 2

1. அப்பாவின் சொத்தை அழித்தேனே
பாவங்கள் பலவே செய்தேன் - 2
தகுதியில்லா என்னையுமே
அன்புடன் நோக்கிடுவார் - 2
மகனாய் ஏற்றிடுவார்

2. தூய்மையின் ஆடையை இழந்தேனே
பரிசுத்த ஆவியை துறந்தேனே - 2
தகுதியில்லாத என்னையுமே
பரிவுடன் நோக்கிடுவார்!
பரிசுத்தம் ஆக்கிடுவார்!

3. தந்தையின் சமூகம் நடப்பேனே
உம் திரு வசனம் கேட்பேனே - 2
தகுதியில்லா ஏழை என்னை
கனிவுடன் நோக்கிடுவார் (2)
இதயத்தில் தாங்கிடுவார்! (2)

## 136. மாசற்ற கன்னியே

மாசற்ற கன்னியே, மாமரியே!
மங்கள வார்த்தைக் கேட்டவளே!
கடைக்கண் பார்த்திடுவாய்
கரம்நீட்டிக் காத்திடுவாய்!
வாழ்க, வாழ்க! மரியே, நீ வாழ்க!!

1. உன்னதர் மகனாம் இயேசுவையே
   உதரத்திலே சுமந்தவளே!
   இதயத்தில் எழுந்திடுவாய்
   என்னுடன் இணைந்திடுவாய்!

2. தேவ வல்லமை பூண்டவளே
   மலராய் பூத்த பூரணமே!

3. இறைவனின் சிந்தையில் நிலைப்பவளே
   பெண்களில் பேறுபெற்றவளே!

## 137. மெசியாவே! மெசியாவே!!

மெசியாவே மெசியாவே
தேவ ரகசியமே! (2)
என்னை மீட்ட மெசியாவே
உலகத்தின் பேரின்பமே! (2)

1. பரிசுத்தமானவரே இம்மானுவேலே - (2)
   எம்மோடு வாசம் செய்வீர்
   எம்மை என்றும் காத்துக்கொள்வீர் - 2
   ஆண்டவரே என்னைக் காத்துக் கொள்வீர்
   என்தேவனே என்னை மீட்டுக் கொள்வீர்

2. உன்னதமானவரே இம்மானுவேலே - 2
   பிணிகளை ஏற்றுக் கொண்டீர்

நோய்களை சுமந்து கொண்டீர் - 2
ஆண்டவரே நோய்களை சுமந்து கொண்டீர்
என் தேவனே என்னை மீட்டுக் கொண்டீர் - 2

3. மகிமை நிறைந்தவரே இம்மானுவேலே - 2
மேகத்தில் வருபவரே
என்னையும் அழைத்து செல்வீர் - 2
ஆண்டவரே என்னை அழைத்து செல்வீர்
என் தேவனே என்னை மீட்டுக்கொள்வீர்!

## 138. யாவே யாவே!

யாவே! யாவே! - 2
அனைத்தையும் படைத்ததெய்வமே
தருகின்றோம் எம்மையே
ஏற்றருளும் ஏற்றருளும்
யாவே! யாவே! - 2

1. திருமகன் தந்தத் திரு உடலை
தூய்மையாய் ஏற்றுக்கொண்டீர் - 2
அப்பா எம்மை சிறுதுண்டு அப்பமாய்
கனிவாய் உடனே ஏற்றுக்கொள்ளும்-2

2. கல்வாரி சிந்திய திருரத்தத்தை
பலிப்பொருளாய் ஏற்றுக்கொண்டீர் - 2
அப்பா எம்மை ஒருதுளி ரசமாய்
கனிவாய் உடனே ஏற்றுக்கொள்ளும்- 2

3. அபிரகாம் கொடுத்தக் காணிக்கையில்
திருநெருப்பாய் இறங்கி வந்தீர் - 2
அப்பா இங்கே அக்கினி வடிவில்
கனிவாய் உடனே எழுந்தருளும் - 2

## 139. யாவே யாவே அல்லேலூயாவே

யாவே யாவே அல்லேலூயாவே
ஆண்டவரே ஆற்றல் உள்ளவரே
உம்மையே ஆசிக்கிறேன்
உம்மையே ஆராதிக்கிறேன் - 2
யாவே யாவே அல்லேலூயாவே - 2

1. பாவச் சேற்றில் கிடந்தேன் - சுவாமி
என்னைத் தூக்கி கழுவினீர்
உலக மாயையில் சிக்கினேன் - உம்
இரத்தத்தால் என்னை இரட்சித்தீரே
யாவே யாவே அல்லேலூயாவே - 2

2. பகைவர் படையாய் வந்தாலும் - ராஜா
தூணாய் நின்று தடுத்தீரே
பாறைமேல் என்னை நிறுத்தினீர் - உம்
இரத்தத்தால் என்னை இரட்சித்தீரே - 2

3. துன்பம் வெள்ளமாய் பாய்ந்தாலும் - ராஜா
தூணாய் நின்று தடுத்தீரே
பாறைமேல் என்னை நிறுத்தினீர் - உம்
இரத்தத்தால் என்னை இரட்சித்தீரே

## 140. வா வா வா! மேலே வா!

இயேசு இராஜா வருகின்றார்
வெற்றியுடன் வருகின்றார்!
வா வா வா! மேலே வா!
சீக்கிரம் புறப்பட்டு வா!

1. மக்களை திரட்டிடுவார்
முத்திரை குத்திடுவார்
வா வா வா! மேலே வா!
சீக்கிரம் புறப்பட்டு வா!

2. உலகத்தை ஜெயித்திடுவார்
வெற்றிக்கொடி நாட்டிடுவார்!
வா வா வா! மேலே வா!
சீக்கிரம் புறப்பட்டு வா!

3. எக்காளம் தொனித்திடுவார்
மேகத்தில் இறங்கிடுவார்!
வா வா வா! மேலே வா!
சீக்கிரம் புறப்பட்டு வா!

## 141. வாழ்வு தரும் வார்த்தையே

வாழ்வு தரும் வார்த்தையே
என்தேவனே என் ராஜனே!
வானவர் பாடும் மகிமையே
என் தேவனே என் ராஜனே!
உம் வார்த்தையல்லோ எனக்கு வாழ்வு
உம் தசையன்றோ எனக்கு உணவு!
மகிழ்ந்து புகழ்ந்து ஸ்தோத்தரிப்பேன்!

1. நிறைவான செல்வமே
அசையாத நங்கூரமே!
குறையாத நம்பிக்கையே
வாடாத சந்தோஷமே! -2
மகிழ்ந்து புகழ்ந்து ஸ்தோத்தரிப்பேன்!

2. கல்வாரி சிகரமே
கறைபோக்கும் செம்மறியே
மண்ணவர் மாட்சியே
அடிமைக்கு வல்லமையே! -2
மகிழ்ந்து புகழ்ந்து ஸ்தோத்தரிப்பேன்!

3. தெவிட்டாத அமுதமே
கிடைக்காத திருமருந்தே!
மாறாத நேசரே
மங்காத நட்சத்ரமே! -2
மகிழ்ந்து புகழ்ந்து ஸ்தோத்தரிப்பேன்!

4. வழிகாட்டும் மேகமே
உணவாகும் உறைபனியே!
சுவையான பானமே
சுகமாக்கும் நற்கனியே! -2
மகிழ்ந்து புகழ்ந்து ஸ்தோத்தரிப்பேன்!

## 142. வானக வாசல் திறந்துள்ளது

வானக வாசல் திறந்துள்ளது
வானகத் தூதர் திரண்டுள்ளனர்
இயேசு ராஜா வருகின்றார்
புறப்படுவோம் ஜனமே புறப்படுவோம்

1. எக்காளம் இன்று ஊதிடுவோம்
சிலுவைக் கொடியை ஏற்றிடுவோம்
முரசுகளாய் இன்று முழங்கிடுவோம்
சத்துருவை நாளும் விரட்டிடுவோம்

2. காவல் கோபுரம் எழுப்பிடுவோம்
கற்களை எல்லாம் அகற்றிடுவோம்
ஆலயம் ஒருநாள் இடிந்திடுமே
ஆவியார் தங்கும் ஆலயம் நாமே

3. கள்ளம் கபடு நீக்கிடுவோம்
கள்வரின் குகையை உடைத்திடுவோம்
கட்சியும் சாதியும் ஒழித்திடுவோம்
ஆண்டவர் வருகையை அறிவிப்போம்

4. சுயநலம் இன்று வெறுத்திடுவோம்
பிறர் நலம் இங்கு வளர்த்திடுவோம்
வெளிவேஷம் நாளும் களைந்திடுவோம்
விசுவாசம் என்றும் காத்திடுவோம்

5. உண்மை ஆவியில் தொழுதிடுவோம்
உயிர் உள்ள வார்த்தைக்கு செவிக்கொடுப்போம்
சத்தியத் திருச்சபை வழி நடப்போம்
சமாதான செய்தியை முழங்கிடுவோம்!

## 143. வான் படைகளின் ஆண்டவரே

வான் படைகளின் ஆண்டவரே
உம்மை போற்றுவேன் உம்மை வாழ்த்துவேன் - 2
எம்மோடு வாசம் செய்பவரே
உம்மை வாழ்த்துவேன் - 2

1. துன்பங்கள் அலையாய் வரும்போது
கன்மலையாய்த் தடுக்கும் ஆண்டவரே - 2
வேதனைகள் என்னை அழுத்தும்போது
இயேசுவே என்னோடு இருப்பீரே - 2

2. குழியில் விழும்போது ஆண்டவரே
அதிசயமாய் என்னை மீட்பவரே - 2
படையாய் எதிர்த்து வரும்போது
இயேசுவே வல்லமையாய் எழுவீரே - 2

3. உம் சொல்லில் பேரமைதி உண்டாகும்
என் ஆன்மா உம்மையே வாழ்த்திடுமே - 2
பயங்கள் என்னை வாட்டும்போது
இயேசுவே விடுதலை தருபவரே - 2

4. உம் பாதம் விழுந்து நான் அழுகின்றேன்
ஆண்டவரே தூக்கி அணைப்பீரே - 2
தனிமையில் நான் தவிக்கும்போது
துணையாக என்னோடு இருப்பவரே - 2

## 144. வாரும் பரிசுத்த ஆவியே

வாரும் பரிசுத்த ஆவியே தாரும்
பரலோக இன்பத்தை - 2

1. அப்பா தந்தாய் என்றழைத்திட
இயேசு ஆண்டவரை உணர்ந்திட - 2
2. இயேசு உத்தமரை புகழ்ந்திட
இயேசு உன்னதரை துதித்திட - 2
3. முடங்கிய கால்கள் நிமிர்ந்திட
தளர்ந்த கைகள் உயர்ந்திட - 2
4. இயேசுவின் பாதையில் சென்றிட
இயேசுவின் வருகையில் நின்றிட - 2
5. அன்பின் அபிஷேகம் அளித்திட
ஆற்றலின் வலிமை பெற்றிட - 2

## 145. ஜனமே என் ஜனமே

ஜனமே என் ஜனமே
ஆயத்தம் ஆகுங்கள்!
ஆண்டவரின் வரும் பெருநாள்
அண்மையில் உள்ளது!

1. தீமையை எதிர்த்திடுவார்
தீச்சூளை வீசிடுவார்
விழித்திடுவாய் எழுந்திடுவாய்
இயேசுவை துதித்திடுவாய்
இயேசுவை புகழ்ந்திடுவாய்!
2. நீதியை விரும்பிடுவார்
பொய்களை எரித்திடுவார்
விழித்திடுவாய் எழுந்திடுவாய்
இயேசுவை துதித்திடுவாய்
இயேசுவை புகழ்ந்திடுவாய்

3. மகிமையில் வந்திடுவார்
அழைத்து சென்றிடுவார்
விழித்திடுவாய் எழுந்திடுவாய்
இயேசுவை துதித்திடுவாய்
இயேசுவை புகழ்ந்திடுவாய்

## 146. யூதகுல சிங்கமே

யூதகுல சிங்கமே வெற்றி உமக்கே
பலியான செம்மறியே ஜெயம் உமக்கே-2
வெற்றி உமக்கே ஜெயம் உமக்கே
வெற்றியும் ஜெயம் உமக்கே! - 2

1. அவமானம் நம்மை அணுகாது
அநீதி நம்மைத் தாக்காது
நிலைத்திருப்போம்
நாம் நிலைத்திருப்போம்
இயேசுவின் சாட்சியாய்
முழங்கிடுவோம்!

2. தாழ்வோ வாழ்வோ வருவனவோ
எதுவும் நம்மை பிரிக்காது!
நிலைத்திருப்போம்
நாம் நிலைத்திருப்போம்
இயேசுவின் சாட்சியாய்
வாழ்ந்திடுவோம்!

3. அபிஷேக முத்திரைப் பெற்றிடுவோம்
ஒருவரை ஒருவர் தாங்கிடுவோம்!
நிலைத்திருப்போம் நாம்
நிலைத்திருப்போம்
இயேசுவின் சாயலாய் மாறிடுவோம்!

## 147. அப்பா நான் உயர்த்துகிறேன்

அப்பா நான் உயர்த்துகிறேன் என்
கண்களை உம்மை நோக்கியே -2
இரங்கும் அய்யா இரங்கும் அய்யா!
என்னையேப் பாரும் அய்யா! -2

1. பணியாளரின் பார்வைபோ
தலைவனின் கையைப்பார்க்கும்
ஏழையின் என் கண்களோ
உம்மையேத் தேடிநிற்கும்!

2. பகைவரின் பார்வையினால்
புழுவாய் துடிக்கின்றேன்
பழிச்சுமை பாவத்தினால்
என் உள்ளம் நகெிந்ததய்யா!

3. நோய் நொடி வாதைகளால்
தளர்வுற்று வாடினேன்
உம் திருவார்த்தையினால்
உடனே சுகம் பெறுவேன்!

4. உம்திரு பார்வையால்
பெரிதாய் மகிழுவேன்
உம்தூய வல்லமையால்
என்றுமே வாழ்ந்திடுவேன்.

## 148. கைத்தாளத்துடனே

கைத்தாளத்துடனே நடனமாடி
ஆண்டவரை ஆர்ப்பரிப்போம்!
எக்காளம் முழங்கி யாழிசைத்து
கர்த்தரையே துதித்திடுவோம்!
ஆ...ஆ...அல்லேலூயா! (2)

1. பெருந்துன்பம் வரும்நேரம்
என்னை அவர் காத்திடுவார்!
அவர் வார்த்தை நான் தாங்குவேன்
என்னை அவர் அழைத்துச்செல்வார்!

2. மனம் நொந்து அழும்போது
என்னை அவர் தேற்றிடுவார்!
கரம் நீட்டி என்னைத் தொடுவார்
என்னை அவர் மீட்டுக் கொள்வார்!

3. வெண்ணாடை அணிந்து நிற்பேன்
என்னை அவர் அணைத்துக்கொள்வார்!
என் இல்லம் அவர் வருவார்
ஒன்றாய் விருந்துண்பார்!

## 149. அடிமையாய் வாழ்ந்தவளே

அடிமையாய் வாழ்ந்தவளே
ஆண்டவரின் அன்னையே!
பெண்களில் பேறு பெற்றவள் நீரே
அருள் நிறைந்தவளே வாழ்கவே
அன்னையே மரியே வாழ்கவே!

1. ஆண்டவரின் விருப்பத்தையே
நிறைவேற்றி மகிழ்ந்தவளே!
அவருடைய செயல்களிலே
துணையாய் என்றும் நின்றவளே!
கல்வாரி வேதனைக் கண்டவளே
மைந்தனை பலியாய் கொடுத்தவளே!

2. கதிரவனை ஆடையாய்
அழகழகாய் அணிந்தவளே!
விண்மீன்களை தலைமீது

மலராய்ச்சூடி மகிழ்ந்தவனே!
பறவை நாகத்தை மிதித்தவனே
பாவ சாபத்தை அழித்தவனே!

## 150. தேவத்திரு அமுதே

தேவத்திரு அமுதே, ஜீவன் தரும் கனியே!
உமக்கே மகிமை, உமக்கேப் பெருமை
என்றென்றும் ஆராதனை!

1. பாரோன் படைகளை அழித்தவரே
   கடலில் பாதை அமைத்தவரே!
   மேகத்தூணே, ஒளிமயமே,
   என்றென்றும் ஆராதனை!
2. பாறையில் தண்ணீரைத் தந்தவரே
   பாலையில் மன்னாவைப் பொழிந்தவரே!
   வானக அப்பமே, திரு உணவே,
   என்றென்றும் ஆராதனை!
3. தூய இரத்தம் வடித்தவரே
   அடிமையைத் தூக்கி அணைத்தவரே!
   பரிமளத் தைலமே, நறுமணமே,
   என்றென்றும் ஆராதனை!
4. பாரச்சிலுவை சுமந்தவரே
   பாவக்கடனை தீர்த்தவரே!
   கன்னியின் மகனே, கனிரசமே,
   என்றென்றும் ஆராதனை!

## 151. ஆட்சி செய்யும் அய்யா!

ஆட்சி செய்யும் அய்யா, ஆவியானவரே!
தூய்மையின் இதயத்தைத் தந்திடுமே, ஆவியானவரே,
பரிசுத்த இதயத்தை தந்திடுமே, ஆவியானவரே!

பகைமையை ஒழித்திட செய்திடுமே, ஆவியானவரே
அன்பால் நிரப்பி நடத்திடுமே, ஆவியானவரே!
ஆட்சி செய்யும் அய்யா, ஆவியானவரே!

1. உம் ஒளியில் என்கண்கள்
பார்த்திட வேண்டும், அய்யா,
உம் சுமையை என்தோளில்
சுமந்திட வேண்டும், அய்யா!
உம் பரிவு இன்று எனக்கு
கிடைத்திட வேண்டும், அய்யா,
உம் அருளில் என் ஆன்மா
நிலைத்திட வேண்டும், அய்யா!

2. உம் பாதை என் கால்கள்
நடந்திட வேண்டும், அய்யா,
உம் அன்பில் என் இதயம்
நிரம்பிட வேண்டும், அய்யா!
உம் செயல்கள் என் கரங்கள்
செய்திட வேண்டும், அய்யா,
உம் புகழை என் நாவு
உரைத்திட வேண்டும், அய்யா!

## 152. கன்னியின் வயிற்றில்

கன்னியின் வயிற்றில் கனிந்தவரை,
காணிக்கைத் தந்தோம் அய்யா!
சிலுவை மரத்தில் மரித்தவரை,
பலியாய்த் தந்தோம் அய்யா!

1. பாலையில் வெண்கலப் பாம்பை
பார்த்தவர் தப்பிப் பிழைத்தாரே!
சிலுவையில் ஏற்றிய இரட்சகரை
கண்டவரெல்லாம் வாழ்வாரே!

2. சோதனை நிலத்தில் நடந்தனரே,
வேதனைத் தீர்ந்திட உண்டனரே!
வானக உணவைப் பகிர்ந்தாரே
உடலையே நமக்காய் கொடுத்தாரே!

3. பரிசுத்த பூமியில் நுழைந்தனரே,
பாலும் தேனும் பருகினரே!
தூய்மையின் ஆவியைப் பொழிந்தாரே,
உயிரையே நமக்காய் கொடுத்தாரே!

## 153. தேவமகனே, இயேசுநாதா

தேவமகனே, இயேசுநாதா,
ஒருவார்த்தைப் பேசும் அய்யா!
ஒருவார்த்தைப் பேசும் அய்யா!

1. என்பக்கம் பாரும் அய்யா,
என்நோய்கள் தீரும் அய்யா!
என் ஜெபத்தைக் கேளும் அய்யா,
உம் கிருபைத் தாரும் அய்யா! எனக்கு
உம் கிருபைத் தாரும் அய்யா!

2. உம்கரங்கள் தொட்டால் போதும்,
என்கண்கள் பார்வை பெறும்!
உன் போர்வை பட்டால் போதும்,
என் வாதை நீங்கிவிடும்! - உடனே
என் வாதை நீங்கிவிடும்!

3. உம்வசனம் கேட்டால் போதும்,
பேய்பூதம் ஓடிவிடும்!
உம் வாக்கு உரைத்தால் போதும்,
என் கவலைத் தீர்ந்துவிடும் - உடனே
என் கவலைத் தீர்ந்துவிடும்!

## 154. ஜெபியுங்கள், ஜெபியுங்கள்

ஜெபியுங்கள், ஜெபியுங்கள்
எப்போதும் ஜெபியுங்கள்!
சொல்லுங்கள், சொல்லுங்கள்
நற்செய்தி சொல்லுங்கள்!
எங்கும் செல்லுங்கள்
யாவர்க்கும் சொல்லுங்கள்!
உலகம் முழுவதையும்
ஒன்றாய் திரட்டுங்கள்!

1. மண்ணையும் விண்ணையும்,
படைத்தவர் நாமே!
காற்றையும் கடலையும்,
கடிபவர் நாமே!
இளைஞர், முதியோரை சீடராக்குங்கள்!
உலகம் முழுவதையும்
ஒன்றாய் திரட்டுங்கள்!

2. பகையையும் நஞ்சையும்
வெல்பவர் நாமே!
பேயையும் பாம்பையும்
ஒழிப்பவர் நாமே!
எளியோர், அறிஞரையும் சீடராக்குங்கள்!
உலகம் முழுவதையும்
ஒன்றாய் திரட்டுங்கள்!



# சம்மனசுக்களின் இராக்கினி தியான மையம்

எண்.791, கீழக்கோட்டையூர்,
சென்னை - 600 048.

## தியான மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள்

1. மாதத்தின் முதல் செவ்வாய்கிழமை தோறும் புனித அந்தோணியார் சிறப்பு உபவாச ஜெபமும் குணமளிக்கும் திருப்பலியும் நடைபெறும். (நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை).

2. செவ்வாய்கிழமைகளில் உபவாச ஜெபமும் குணமளிக்கும் திருப்பலியும் நடைபெறும். ஜெபமும் திருப்பலியும் காலை 9 மணிமுதல் மதியம் 2 மணிவரை, மதியம் 2 மணிமுதல் மாலை 5 மணிவரை தந்தையைச் சந்தித்து ஆலோசனை பெறும் நேரம்.

3. மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை ஆண்டவரின் இரக்கத்தின் நாள் அன்று சிறப்பு உபவாச ஜெபமும் குணமளிக்கும் திருப்பலியும் நடைபெறும். (நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை) தந்தையைச் சந்தித்து ஆலோசனை பெறவும் வாய்ப்பு உண்டு.

4. மாதத்திற்கு ஒருமுறை குடிநோயாளிகளுக்கு ஆலோசனையும் விடுதலை ஜெபமும் நடைபெறும். நடைபெறும் நாள் முன்னதாக இயேசுவே ஆண்டவர் பத்திரிகையில் அறிவிக்கப்படும். (முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்)

5. மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை. லொயோலா கல்லூரி ஆலயத்தில் ஒரு நாள் உபவாச ஜெபமும் குணமளிக்கும் திருப்பலியும் நடைபெறும். (நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை)

6. மாதந்தோறும் வெளிவரும் இயேசுவே ஆண்டவர் நம் மீட்பர் பத்திரிகையை படித்து பயன்பெறுங்கள். வருட சந்தா ரூபாய் 100/- பத்திரிகை வேண்டுவோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்கொள்ளுங்கள்.

தந்தை வி.இக்னேஷியஸ், சே.ச அவர்களின்
பாடல்கள் அனைத்தும் MP3 CDயில் புதுப்பொலிவுடன் வெளியிடப்பட்டுள்ளது,



பாடல் CD, VCD, DVD மற்றும் கேசட்டுகள் பெற விரும்புவோர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**இயேசுவே ஆண்டவர் பத்திரிகை அலுவலகம்**
தபால் பெட்டி எண்: 8595 சத்திய நிலையம்,
81, எல்.பி.ரோடு, திருவான்மியூர், சென்னை-41.
தொலைபேசி: (044) 4230 0277

Website : www.yesuveaandavar.org
E-mail : fr-ignatius@yesuveaandavar.org